# தீபகச் சுடர்

நவம்பர் 2025

தீபம் 14 சுடர் 6

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.


## அனைவரும் புனிதராய் வாழ அழைக்கப்பட்டோம்!



# தீபகத்திலிருந்து இறையாசீர்



அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,

## அனைவரும் புனிதராய் வாழ அழைக்கப்பட்டோம்!

புனிதர்கள் திருநாள் - இறந்த ஆன்மாக்களின் திருநாள்

## நமக்கு நினைவூட்டும் நம்பிக்கையின் நாட்கள்

ஒவ்வொரு நவம்பர் மாதமும், நம் திருஅவை இரண்டு முக்கியமான நாட்களை நினைவு கூறுகிறது - நவம்பர் 1 : புனிதர்கள் திருநாள் (All Saints... Day) மற்றும் நவம்பர் 2 : இறந்த ஆன்மாக்களின் திருநாள் (All Souls... Day). இந்த இரண்டு நாட்களும் நமக்குள் ஒரு அழகிய உண்மையை நினைவூட்டுகின்றன : மனித வாழ்க்கை மரணத்தில் முடிவதில்லை: அது முடிவில்லா வாழ்வில் தொடர்கிறது.

**1. புனிதர்களின் பெருமை : நம்மோடு வாழ்ந்தவர்கள் : இறைவார்த்தை கூறுகிறது: "நீங்கள் தூயவராயிருங்கள்: ஏனெனில் நான் தூயவன்" (1 பேதுரு 1:16).**

புனிதர்கள் என்றால் சின்னங்கள், சிலைகளில் மட்டும் வாழ்பவர்கள் அல்ல: அவர்கள் நம்மைப்போல் மனிதர்கள் - சோதனைகள், கஷ்டங்கள், பாவங்களுடன் போராடியவர்கள். ஆனால் அவர்கள் இறைவனின் அருளில் வாழ்ந்து, அன்பு, மன்னிப்பு, தியாகம், மற்றும் நம்பிக்கை வழியில் நடந்தார்கள்.

அவர்களின் வாழ்க்கை நமக்கு நினைவூட்டுவது புனிதம் என்பது சிலருக்கானது அல்ல, ஒவ்வொருவருக்குமான அழைப்பு. நம்முடைய குடும்ப வாழ்க்கை, தொழில், பள்ளி, ஊர், சேவை - எல்லாவற்றிலும் நாம் கிறிஸ்துவின் ஒளியாக, புனிதராக வாழலாம்.

**2. இறந்த ஆன்மாக்களின் தினம்: நினைவில் வைத்திருக்கும் அன்பு**

நவம்பர் 2 அன்று, நம் திருஅவை, இறந்த அன்புக்குரியவர்களுக்காக ஜெபிக்கின்றது. இது ஒரு துக்க நாள் அல்ல: நம்பிக்கையின் நாள். இயேசு கூறுகிறார்: "உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே: என்னில் நம்பிக்கைக் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்." (யோவான் 11: 25).

இந்நாளில், நம் குடும்பத்தில் இறந்த தாய், தந்தை, உறவினர், நண்பர்கள்– அவர்களுக்காக நன்றி சொல்லும் நாள். நாம் ஜெபிக்கும் ஒவ்வொரு திருவிழாவும், ஒவ்வொரு மெழுகுவர்த்தியும், ஒவ்வொரு நற்செயலும் அவர்களின் ஆன்மா அமைதியில் இருக்க உதவுகிறது.

### 3. திருஅவையின் மூன்று நிலைகள் திருஅவை சொல்லும் ஒரு அழகிய உண்மை:

| | | |
|---|---|---|
| வெற்றி பெற்ற திருஅவை (Church Triumphant) | - | விண்ணுலகில் உள்ள புனிதர்கள். |
| பயணம் செய்யும் திருஅவை (Church Militant) | - | நாம், பூமியில் வாழும் நம்பிக்கையாளர்கள். |
| சுத்திகரிக்கப்படும் திருஅவை (Church Suffering) | - | விண்ணகத்துக்குத் தயாராகும் ஆன்மாக்கள். |

### 4. நம்பிக்கை வழியிலான அழைப்பு

நாம் நினைவுகூரும் புனிதர்கள் போல, நம்மையும் இறைவன் அழைக்கிறார்: அன்பில் வளர, மன்னிப்பில் நிலைக்க, நம்பிக்கையில் வாழ. நாம் மரணத்தைப் பார்த்து பயப்படுவதற்கல்ல, அதை ஒரு நிலை வாழ்க்கைக்கான வாசல் என ஏற்றுக் கொள்வதற்காகவே நம்பிக்கை வாழ்வை நடத்த வேண்டும்.

### முடிவு சிந்தனை:

நவம்பர் மாதம் நமக்கு சொல்லும் செய்தி இதுதான் "நம்மை விட முன்னே சென்றவர்களை நினைவில் வைத்திருங்கள், அவர்களின் நம்பிகையைப் பின்பற்றுங்கள், நாமும் புனிதத்தில் வளர்ந்து முடிவில்லா வாழ்வில் சேருவோம்"

என்றும் அன்புடன்

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்



## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி

| | | |
|---|---|---|
| 01.11.2025 | புனிதர் அனைவர் பெருவிழா - திருப்பலி | 06 |
| 02.11.2025 | இறந்த ஆன்மாக்களின் திருவிழா - திருப்பலி | 07 |
| 04.11.2025 | புனித சார்லஸ் பொரோமெயோ - திருப்பலி | 08 |
| 09.11.2025 | இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு - திருப்பலி | 10 |
| 10.11.2025 | புனித பெரிய லியோ - திருப்பலி | 11 |
| 13.11.2025 | புனித அலோசியஸ் வெர்சிலியா, கலிஸ்துஸ் கரவாரியோ - திருப்பலி | 12 |
| 14.11.2025 | குழந்தைகள் தினவிழா - செபவழிபாடு | 14 |
| 15.11.2025 | அருளாளர் மதலேனா மொரானோ - திருப்பலி | 16 |
| 16.11.2025 | பொதுக்காலம் 33ம் ஞாயிறு - திருப்பலி | 18 |
| 18.11.2025 | புனித பேதுரு பவுல் ஆலயம் நேர்ந்தளிப்பு - திருப்பலி | 19 |
| 21.11.2025 | தூய கன்னி மரியாவைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் - திருப்பலி | 20 |
| 22.11.2025 | புனித செசிலியா விழா - திருப்பலி | 22 |
| 23.11.2025 | கிறிஸ்து அரசர் பெருவிழா - திருப்பலி | 23 |
| 30.11.2025 | திருவருகைக் காலம் முதல் ஞாயிறு - திருப்பலி | 24 |

## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...

| | |
|---|---|
| கல்லறைத் திருநாள் தரும் பாடம் | 28 |
| கிறிஸ்து அரசர் பெருவிழா - ஒரு பார்வை | 32 |
| சலேசிய மறைசாட்சியர் அலோசியஸ் வெர்சிலியா மற்றும் கலிஸ்துஸ் கரவாரியா - இவர்களின் வாழ்வு நமக்கு தரும் பாடம் | 37 |
| திருஅவைச் செய்திகள் | 40 |

## பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி

# புனிதர் அனைவர் பெருவிழா

திருப்பலி
01.11.2025

## முன்னுரை

*திரு. ஜான் சுரேஷ்*

I. *யோவான் 7: 2-4, 9-14* II. *1யோவான் 3: 1-3* *மத்தேயு 5: 1-12*

அன்புக்குரியவர்களே, ஆன்மா தெய்வீகமானது, ஜடப்பொருட்களின் கட்டுக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. இக்கட்டுகள் அவிழும்போது ஆன்மா நிறை நிலையை அடைகிறது. அந்த நிலையே முக்தி. முக்தி என்பது விடுதலை என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது. தூயவர்களும், மாசற்றவர்களும் கடவுளைக் காண்கின்றனர். அப்போது இதயக் கோணல்கள் நேராகின்றன (சுவாமி விவேகானந்தர்). தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர் (இறைமகன் இயேசு). உலக வாழ்வில் செல்வம் அனைத்தையும் பெற்று தரும். மறு உலகில் நாம் இறைவனுடன் இணைந்து வாழ நாம் செய்த நன்மைகள், இறைத்தொண்டு, நம் தூய வாழ்வு, எளிய வாழ்வு மற்றும் தியாக வாழ்வு இவற்றால் நாம் அந்த முக்தி பேறு பெற்று புனிதர்களாக இறை இயேசுவால் அடையாளப்படுத்தப்படுகின்றோம். இன்றைய நாளை நமது தாய் திருஅவை அனைத்துப் புனிதர்களையும் நினைவு கூறும் நாளாக கொண்டாடுகின்றது. ஒவ்வொரு புனிதருக்கும் ஒரு சிறப்பான புதுமையான வரம் இருப்பதால் நாம் நம் தேவைகளை அவர்கள் மூலமாக நிறைவேற்றிக் கொள்ளவும், நமக்காக அவர்கள் இயேசுவிடம் பரிந்துப் பேசவும், அவர்களை நம்முடைய ஆன்ம வழிகாட்டிகளாகப் பயன்படுத்திக்கொள்ள இத்திருப்பலி வழியாக பக்தியுடன் நம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து புனிதர்களின் துணையுடன் இறையருளைப் பெற்றுக்கொள்ள இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் தலைவராக உள்ள திருத்தந்தை லியோ அவர்கள், நம்மிடையே வாழும் புனிதராக நம்மை வழிநடத்தி நாமும் புனித வாழ்வு வாழும் மக்களாக மாறவும் கத்தோலிக்க திருஅவை புத்துயிர் பெற்றெழுந்து ஒளிவீச அனைத்து குருக்களும் தங்களை முழுமையாக அர்ப்பணித்து இறை ஊழியம் செய்ய புனிதர்கள் அவர்களை பெயர்ச்சொல்லி அழைத்து இறையாசீரை பெற்றுத்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் துறவறத்தார் திருஅவையின் திருவழிப்பாடுகளுக்கு துணை செய்வது மட்டுமே தங்கள் பணியென்றில்லாமல் ஏழை, எளிய மக்களுக்கு உதவவும், இயேசுவை அனைவருக்கும் அறிவிக்கவும், இறைவார்த்தையை பகிர்ந்தளிக்கவும் இறை மதிப்பீடுகளின்படி தொண்டுபுரிய அனைத்து புனிதர்களும் அவர்களின் ஆன்மாவை பாதுகாத்து இறைமக்களாக வாழும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நாளைய தலைவர்களாக, நம்மை வழிநடத்தக் கூடிய இளைஞர்கள் உலகளாவிய வாழ்விற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் பொறுப்புள்ள, கண்ணியமான, கல்வி, கேள்விகளில், பக்தி, விசுவாசமுள்ள வாழ்வு வாழவும், மனித நேயத்துடன் நீதி நேர்மையை நிலைநாட்ட அனைத்து புனிதர்களின் பாதுகாப்பும், வழிகாட்டுதலும் கிடைக்கப்பெற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. அன்பின் ஆண்டவரே, அனைத்து புனிதர்களின் விழாவினைச் சிறப்பிக்கும் நாங்கள், இன்றைய காலச்சூழலில் இறைவனுக்கு நம்பிக்கைக்குரியவர்களாக வாழவும், தங்களின் வாழ்வை நேரிய வழியில் வாழ்ந்து, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டான வாழ்வை வாழும் வரமருளவும், வாழ்வில் கடைப்பிடித்து வாழ புனிதர்களாக வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# இறந்த ஆன்மாக்களின் திருவிழா

திருப்பலி
02.11.2025

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *சாஞா. 3: 1-9* II. *உரோ. 5: 5-11* *மத். 25: 31-46*

இயேசுவில் பிரியமானவர்களே, இன்று திரு அவையானது பொதுக்காலம் 31 ஆம் ஞாயிறு மற்றும் இறந்த நம்பிக்கையாளர்கள் அனைவரின் நினைவு நாளைக் கொண்டாடி மகிழ்கிறது. இன்று விண்ணகத்திலும், உத்தரிக்கிற ஸ்தலத்திலும் உள்ள ஆன்மாக்களை நினைக்கின்ற புனித நாள் : இவ்வுலகில் உயிர்வாழ்வோர் தங்களது செபம், தவம், தானதர்மம் வழியாக இறந்து போன ஆன்மாக்களுக்கு உதவி செய்யும் புனிதம் மிகுந்த நாள். இறந்த ஆன்மாக்கள் அனைவரும் விண்ணக பேரின்பத்தில் நுழைய வழிகாட்டும் நாள். இன்றைய முதல் வாசகத்தில் நேர்மையாளராக இவ்வுலகில் வாழ்ந்த மனிதர் மறுவுலகில் அமைதி காண்பர். ஆனால் இறைப்பற்றின்றி வாழ்வோர், தண்டனை பெறுவர். ஆகவே நம்மை அழைக்கின்ற கடவுளுக்கு நாம் எவ்விதத்தில் பதில் அளிக்கின்றோமோ அதைப்பொறுத்தே நமது மறுவுலக வாழ்வு அமையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தூய ஆவி வழியாகக் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது. அந்த அன்பைப் பெற்றுள்ள நாம் ஒருபோதும் ஏமாற்றம் தராத எதிர்நோக்கை கொண்டுள்ளோம். எனவே, கடவுள் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்னும் உறுதி நமக்கு இருப்பதால் நாம் எதையும் கண்டு அஞ்சவேண்டியதில்லை என்று புனித பவுல் இரண்டாம் வாசகம் மூலம் தெளிவுப்படுத்துகிறது. நற்செய்தியில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. நிலைவாழ்வைக் கண்டடைய நமக்கு இரண்டு நிபந்தனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்று நமது நெறி பிறழா வாழ்க்கை, மற்றொன்று நலிவுற்ற அந்நியர்களிடத்தில் நாம் கொள்ள வேண்டிய பரிவு. எனக்கு வாழ்வு என்பது கிறிஸ்துவே என்கிறார் தூய பவுல். கிறிஸ்துவுக்குள் வாழும் ஒருவருக்கு மரணம் என்பது மறுவாழ்வு.

பெருமகிழ்ச்சி, பேரமைதி, இறைதரிசனம், நிறைவாழ்வு மற்றும் நிலைவாழ்வு ஆகும். துன்புறும் ஆன்மாக்களின் கட்டுக்கள் அவிழ்க்கப்படவும், மகிமை வாழ்வினில் திளைக்கும் மகத்தான பேற்றிற்கு மரித்த ஆன்மாக்கள் உரியவர்களாக இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. உயிர்ப்பும் உயிருமான தெய்வமே! திருஅவையின் பொறுப்பாளர்கள் அனைவரும் உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து, மக்களை நல்வழியில் நாளும் வழிநடத்தக்கூடிய ஆற்றலையும் சக்தியையும் தந்து, தங்களின் இறப்புக்குப்பின் உள்ள நிலைவாழ்வை தெளிவுற அறிவுறுத்தி ஆன்மாக்களை மீட்டு, உமக்கேற்ற பாதையில் மக்களை கொண்டு சேர்க்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. கருணையின் திருவுருவே, எம் இறைவா, எம் நாட்டுத்தலைவர்கள் மக்களுக்காக தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் சேவையில் நாளும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, தன்னலம் கருதாமல், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு நாளும் செயல்பட இவர்களுக்குப் போதுமான உடல் உள்ள நலனளித்து, பாதுகாத்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் இறைவா, யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக மன்றாடுகிறோம். அவர்கள் தாங்கள் செய்த பாவங்களினால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருந்தாலும் அவர்கள் வேதனை குறைந்து உம் தெய்வீக விருந்தில் பங்குபெற அவர்களின் குற்றங்குறைகளை, பாவங்களை மன்னித்து, உமது கருணையினால் அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. மிகச்சிறியோராகிய என் சகோதரர் சகோரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்திர்கள் என்று கூறிய ஆண்டவரே, நலிவுற்ற அந்நியர்களிடத்தில் நாங்கள் பரிவு கொண்டு வாழவும், அவர்களின் தேவைகள் என்னவென்பதை அறிந்து அவர்களோடு தோள்கொடுத்து, துணைநிற்கும் பரந்த மனதைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.



## புனித சார்லஸ் பொரோமெயோ

திருப்பலி
04.11.2025

## முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

இறை இயேசுவில் அன்பானவர்களே, கி.பி. 16வது நூற்றாண்டின் திருஅவையின் மங்காத மாணிக்கமாகத் திகழ்ந்தவர் புனித சார்லஸ் பொரோமெயோ. இவரது காலத்தில் திருஅவையில் சில சீர்த்திருத்தங்கள் தேவைப்பட்டன. இவற்றைப் பெருமளவில் செயல்படுத்தி இவர் வெற்றிக் கண்டார். இவருக்கு அன்றைய நாட்களில் திருத்தந்தையாக இருந்த நான்காம்

பத்திநாதருக்கு சங்கத்தை திறமையுடன் நடத்துவதற்குப் பெரிதும் உதவி புரிந்தார். தமது 27வது வயதிலிருந்து 46வயது வரை மிலான் நகர் ஆயராகப் பணியாற்றினார். ஸ்விஸ் நாட்டுக்குப் பயணமாகி பல பகுதி மக்களையும் சந்தித்து, கத்தோலிக்க நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்டினார். ஏழைகளுக்காக ஏராளமான பணத்தைச் செலவழித்தார். பிளேக் தொற்றுநோய் பரவிய நாட்களில் கடுமையாக உழைத்து தொண்டு புரிந்தார். இத்தகைய அரும்பெரும் முயற்சிகள் அவரது உடல் நிலையைப் பெரிதும் பாதிக்கவே தமது 46வது வயதில் காலமானார். இவர் எழுதிய நூல்களைத் தெளிவாகப் படித்து முடித்தப்பின் திருத்தந்தை 23ம் அருளப்பர் இவரை ஆயர்களுக்கு ஆசிரியர் என அழைத்தார்.

இப்புனிதர் தன்னுடைய வாழ்வில் பல குறிக்கோள்களை முன்வைத்து அவற்றை கடைப்பிடித்து வாழ்ந்துக் காட்டினார். அவையாவன: ஒவ்வொரு நாளையும் புதிய ஆர்வத்துடன் செயல்படுத்த கடவுள் இன்னுமொரு நாளைக் கொடுத்து, பிறருக்கு நன்மைகள் பல செய்யும் உறுதியுடன் அந்த நாளைத் தொடங்குங்கள். எப்பொழுதும் கடவுளின் பிரசன்னத்தில் வாழ முயற்சி செய்யுங்கள். ஆன்மாவின்மீது அருட்சாதங்களை தகுந்த முறையில் நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்துங்கள். நாமும் அவரின் வழிமுறைகளைப் பின்பற்றி நடந்தால் இவரைப்போன்ற நல்ல மனம் கொண்டவர்களாக இறைவனுக்கேற்ற வாழ்க்கை வாழ்வோம் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு இவ்வரங்களைப் பெற இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நல்லாயனாம் இறைவா, உமது மேய்ப்புப்பணியை தொடர்ந்து நிறைவேற்ற உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினர் அனைவருக்கும் உமது வல்லமையையும் தூய ஆவியாரின் அருட்கொடைகளையும் பொழிந்து, என்றும் துணையாக இருக்க, தூய ஆவியின் துணையோடு திருஅவையை வழிநடத்தும் அருளைத் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. நம்பிக்கையின் இருப்பிடமே இறைவா, இன்றைய நாட்களில் கத்தோலிக்க திருஅவையின் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவலநிலைகள், கொடுமைகள், சித்தரவதைகள் போன்ற இன்னல்களிலிருந்து காக்க வேண்டுமென்றும் இவர்களின் துன்ப நேரங்களில் நீரே இவர்களுக்கு ஆறுதலாகவும், அடைக்கலமாகவும் இருக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. கருணைக் கடலே இறைவா, நீர் கத்தோலிக்க திருஅவையை வழிநடத்த தேர்ந்துக்கொண்ட எல்லா அருட்பணியாளர்களுக்காகவும், அவர்களின் தியாக பணிகளுக்காகவும் நன்றி செலுத்துகின்றோம். எம் இளைஞர், இளம்பெண்களுக்கு நல்மனதையும், தியாக உள்ளத்தையும் தந்து தேவ அழைத்தலுக்கு தங்களை அர்ப்பணிக்கும் மனதைரியத்தையும், தெய்வ பக்தியையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு

திருப்பலி
09.11.2025

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

I. *எசே. 47: 1-2, 8-9,12* II. *1கொரி. 3: 9-11, 16-17* *யோவா. 2: 13-22*

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று அன்னையாம் திருஅவை எல்லா ஆலயங்களுக்கும் தாய் ஆலயமாக இருக்கக்கூடிய இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு விழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. ஒவ்வொரு ஆயருக்கும் ஒரு பேராலயம் பொறுப்பில் இருக்கும். அந்த விதத்தில் பார்க்கும்போது உரோமை நகரின் ஆயராக இருக்கக்கூடிய திருத்தந்தையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பேராலயம்தான் இந்த இலாத்தரன் பேராலயம், 324 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் தேதி நேர்ந்தளிக்கப்பட்டது. தொடக்கத்தில் இப்பேராலயம் உலக மீட்பருக்கும், பின்னர் திருமுழுக்கு யோவானுக்கும், அதன் பின்னர் நற்செய்தியாளரான தூய யோவானுக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. பேராலயம் நேர்ந்தளிக்கப்பட்ட நாளிலிருந்து ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகள் திருத்தந்தையர்கள் அங்கேதான் தங்கியிருந்தார்கள். இன்னும் ஒருசில காரணங்களால் இலாத்தரன் பேராலயம் மேலும் சிறப்புப் பெறுவதாக இருக்கின்றது. குறிப்பாக ஆண்டவர் இயேசு தன்னுடைய இறுதி இராவுணவின்போது உண்ணப் பயன்படுத்திய மேசை இங்கேதான் இருக்கின்றது. அதேபோன்று திருத்தூதரான தூய பேதுரு திருப்பலி நிறைவேற்றிய பலிபீடம் இங்கேதான் இருக்கின்றது. இப்படி பல்வேறுபட்ட சிறப்புகளைக் கொண்டதால் இப்பேராலயம் "பொன் ஆலயம் - Golden Church" என்று அழைக்கப்படுகின்றது.

இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு விழாவைக் கொண்டாடும் இன்றைய நாளில், இறைவாக்கினர் எசேக்கியேல் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட முதல் வாசகத்தில், கோவிலிருந்து வரும் தண்ணீரை கடவுளின் அருளாக நாம் புரிந்துகொள்ளலாம். நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு எருசலேம் ஆலயத்தை "தந்தையின் இல்லம்" என்று அழைக்கின்றார். அதனால்தான் அவ்வாலயத்தில் வாணிபம் செய்தவர்களை எல்லாம் அவர் விரட்டி அடிக்கின்றார். கிறிஸ்தவர்களாகிய நாம் ஆலயத்தின் மதிப்பையும், பெருமையும் உணர்ந்துகொண்டு அதற்கேற்ப வாழ்கின்றோமா என்று சிந்தித்துப் பார்க்க அழைக்கப்படுகிறோம். நாம் ஒவ்வொருவரும் தூய ஆவி வாழும் கோவில். எனவே சக மனிதருக்கு மதிப்பளிக்கின்ற ஒருவர் கடவுளுக்கு மதிப்பளிக்கிறார். அதே நேரத்தில் சக மனிதரை இழிவுபடுத்தும் ஒருவர் கடவுளையும் இழிவுபடுத்துகிறார் என்ற உண்மையைப் புரிந்துகொண்டு இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் இறையருளின் பிறப்பிடமான கோவிலுக்கு உரிய மரியாதை செலுத்தி வாழ்வோம். அத்தோடு நம்மோடு வாழும் உயிருள்ள ஆலயங்களாகிய சக மனிதர்களை மனிதர்களாக மதித்து, அவர்களை முழுமையாக அன்புசெய்யக் கற்றுக்கொண்டு வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. எங்களை உமது கோயிலாகப் படைத்து, எங்களிலே வாழ்வதில் மகிழும் இறைவா, உம்மைப் போற்றுகிறோம். எங்களின் உடலும், பிறரது உடல்களும் மாண்புக்குரியவை, மதிப்புக்குரியவை என்பதை உணர்ந்து வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. நம்பிக்கையின் நாயகனே இறைவா, எங்கள் வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் உம் வருகை நிகழ்கிறது என்பதை நாங்கள் கண்டுகொள்ள தேவையான வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. இறைவன் நம்மோடு பேசும் வார்த்தைகள் அனைத்துமே நமக்கு வாழ்வு தரக்கூடியவையே என்பதை இறைவாக்கினர் எசேக்கியேல் வழியாக எடுத்துரைத்தீரே, எங்கள் வாழ்வில் சந்திக்கும் சோதனைகளுக்கு அருமருந்தாகவும், அதனை எதிர்த்து நிற்பதற்கு ஆற்றலையும் உம் வார்த்தை என்னும் நீரூற்றை பருக தெளிவான உள்ளத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# புனித பெரிய லியோ

திருப்பலி
10.11.2025

## முன்னுரை

*திரு. விக்டர்*

இறையன்பர்களே, இன்று நாம் மேனாள் திருத்தந்தை புனித பெரிய லியோ அவர்களின் நினைவை கொண்டாடுகிறோம். திருத்தந்தை லியோ 4ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவரின் பிறப்பு பற்றி சரியான விவரங்கள் கிடைக்கவில்லை எனினும் அவருடன் பயணித்த மற்ற சான்றோர்கள் இவரை சிறந்த சிந்தனையாளர், சிறந்த அறிவாளி என குறிப்பிடுகின்றார்கள். இவர் திருத்தந்தையாக இருந்த தருணத்தில் இயேசு கிறிஸ்துவின் இறைத்தன்மைக்கும், மனிதத் தன்மைக்கும் எதிராக இருந்த தவறான கருத்துக்களை எதிர்த்து குரல் கொடுத்து இறை மகன் இயேசு கிறிஸ்துவில் மனிதத்தன்மை இறைத்தன்மை இரண்டும் சமமாக வெளிப்பட்டது என்று உறுதிசெய்துக் காட்டினார். இன்றைய வாசகங்களும் இறையாட்சியைப் பற்றிய நமது சிந்தனையை தூண்டும் வகையில் அமைந்துள்ளது. கிறிஸ்துவின் இறைத்தன்மையையும் மனிதத்தன்மையும் நாம் முழு நம்பிக்கைக்கண் கொண்டு ஏற்றுக்கொண்டோம் என்றால் அங்கு இறையாட்சி நிறுவப்படுகிறது. இந்த இறையாட்சி என்பது நமது மத்தியில் இருக்கின்றது என்பதை உணர நாம் நம்பிக்கையில் ஆழப்பட வேண்டும். இறையாட்சி நம் மத்தியிலே

செயல்படுகிறது அப்படியெனில் இறைவன் நம்மிடையே உள்ளார், அவரை எங்கும் தேடவேண்டாம் என்பதை உணரவும் ஏற்றுக் கொள்ளவும் இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. எனவே பக்தியோடு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் தலைவர்களான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் உம்மீது முழுமையான நம்பிக்கைக் கொண்டு செப வாழ்வில் நிலைத்திருக்கவும், மக்களை நல்வழியில் நடத்திச்செல்ல போதுமான ஞானத்தையும் அருளையும் நிறைவாக பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. உலக நாடுகளின் தலைவர்கள் அனைவரும் உண்மையிலும், நேர்மையிலும் நிலைத்திருந்து தங்களின் பணிவாழ்வில் மக்களின் தேவைகளை முழுமையாக நிறைவாக செயல்படுத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பு இறைவா, உம் பிள்ளைகளாகிய நாங்கள் உம்மைப்போன்று பிறரை மன்னிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் தேவையான மனவலிமையையும், மனப்பக்குவத்தையும் இறைமக்களாகிய எங்களுக்கு உம் தூய ஆவியின் வல்லமையை நிறைவாக பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# புனித அலோசியஸ் வெர்சிலியா, கலிஸ்துஸ் கரவாரியோ

திருப்பலி 13.11.2025

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

**அலோசியஸ் வெர்சிலியா :** 1873ஆம் ஆண்டு ஒலிவ ஜெசி என்ற இடத்தில் பிறந்தார். தனது 12ம் வயதில் தொன் போஸ்கோ நிறுவனத்தில் சேர்ந்தார். 1895ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்று, பிறகு 10 வருடங்கள் உரோமை நகரிலுள்ள ஜென்சானோவில் நவதுறவற இல்லத்தின் அதிபராக பணியாற்றினார். பின்பு இவர் 1906ஆம் ஆண்டு தொன் போஸ்கோவின் கனவை நனவாக்க சலேசியர்களை அழைத்துக் கொண்டு முதல் முறையாக சீனாவிற்குப் பயணம் மேற்கொண்டார். மக்காவு என்னுமிடத்தில் சலேசிய தலைமையகம் ஒன்றை நிறுவினார். மேலும், சியு சோவ் என்ற இடத்தில் மறைப்பரப்பு மையம் ஒன்றை நிறுவி, அதே இடத்தில் 1920ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் நாள் முதல் ஆயராக பொறுப்பேற்றார். தன்னலமிக்க பணியாளராகவும் தன்னுடைய மந்தைகளுக்கு உண்மையான ஆயராகவும் இருந்து செயல்பட்டார். அவர் தனது மறைமாவட்டத்தை உறுதியான அடித்தளத்தின்மீது உருவாக்கினார். குருமடங்கள், தங்குமிடங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் முதியோருக்கான காப்பகங்கள் போன்றவைகளை நிறுவினார். இவர் தனது ஆயர் பணியை நல்லாயனின் வழியில் செய்து தம்

குருக்களை மற்ற பணித்தளத்திற்கு அனுப்புவதற்கு முன்பே ஒவ்வொருவரின் விருப்பத்தையும் கேட்டறிந்து அதற்கேற்ப செயல்பட்டார்.

**கலிஸ்துஸ் கரவோரியோ :** 1903ஆம் ஆண்டு தூரின் நகரிலுள்ள குவோர்னியில் பிறந்தார். இவர் 1922ஆம் ஆண்டு ஆயர் வெர்சிலியாவை சந்தித்து, "நானும் உங்களோடு சீனாவிற்கு வருவேன்", என்று அவர் கொடுத்த வாக்கை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவேற்றினார். பிறகு இவர் ஒரு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். மேலும், இவர் தனது துறவற அர்ப்பணத்தில் மிகுந்த பற்றுறுதியுடன் வாழ்ந்தார். 1930ஆம் ஆண்டு பிப்ரவரி 25ஆம் நாள் லின் சோவ் மாவட்டத்தில் ஆயர் தனது மேய்ப்புப் பணியை மேற்கொண்டபோது இவரும் இரண்டு ஆசிரியர்களும், இரு பெண் வேதியர்களும் மற்றும் ஒரு மாணவியும் உடன் சென்றனர். அவர்கள் தனிமையான ஓர் ஆற்றிலே சென்றுக் கொண்டிருந்தபோது வழிபறி கொள்ளையர்களால் தாக்கப்பட்டனர். தாங்கள் வழிநடத்திச் சென்ற இளம்பெண்களை வழிபறிக் கொள்ளையர்களிடமிருந்து காப்பாற்ற இவர்கள் முயன்றபோது, கொடூரமாக தாக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் தங்களின் தியாக உணர்வினால் தூண்டப்பெற்று, நற்செய்தியின் தூதுவர்களாக பணியாற்றியதையும், வாழ்வை முழுவதுமாய் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தைகளுக்காக அர்ப்பணித்ததையும், உண்மையையும், நீதியை நிலைநாட்டியதையும், ஏழைகளுக்கும் மற்றும் வலிமையிழந்தோர்க்கும் நம்பிக்கையூட்டியதையும், பாவத்தையும், இறப்பையும் வெற்றி கொண்டவர்களாய் வாழ்க்கையை அர்ப்பணித்ததையும் கண்டுணர்ந்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவர்கள் இருவரையும் 1983ஆம் ஆண்டு மே 15ஆம் நாள் சலேசிய சபையின் முதல் மறைசாட்சிகளாக அறிவித்து, பின்னர் 2000ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் நாள் புனிதர்களின் நிலைக்கு உயர்த்தினார்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக வாழ்ந்து, வெற்றி வீரர்களான புனித அலோசியஸ் வெர்சீலியா மற்றும் கலிஸ்துஸ் கரவாரியோ தரும் முன்மாதிரியைப் பின்பற்றி, பல இன்னல்கள் மத்தியிலும் இறையாட்சிக்கான விதைகளை விதைக்கவும் தங்கள் பணிகளை தாராள மனதுடனும், திறமையுடனும் நிறைவேற்றவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. மறைப்பரப்பு பணியாளர்கள் தங்களின் வாழ்வில் சந்திக்கும் துன்பங்கள் அலையென திரண்டுவரினும், இயேசுவின்மேல் அதிமிகு தாகம் கொண்டு, நற்செய்தியின் விதைகளை விதைத்து மக்களின் உள்ளங்களில் உண்மை, நீதி, நேர்மை, சமாதானம், ஒற்றுமை இவற்றால் நிரப்பி வாழ்வில் புத்துணர்வும் புதுவாழ்வும் பெற்றவர்களாய் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. மறைசாட்சிகளாக வாழ்ந்து, வாழ்வில் வெற்றி கண்ட வீரர்களான புனித அலோசியஸ் வெர்சிலியா, மற்றும் புனித கலிஸ்துஸ் கரவாரியோ இவர்களின் முன்மாதிரியினால் தூண்டப்பெற்று, சலேசிய குடும்பத்தினர்

அனைவரும் வாழ்வில் ஏற்படும் துன்பங்களையும், இடையூர்களையும், சோதனைகளையும் முறியடித்து தூய வாழ்வு வாழ்வதற்கான அனைத்து அருள்வரங்களையும் பெற்று வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# குழந்தைகள் தினவிழா

செபவழிபாடு
14.11.2025

## முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

"பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் மக்கட்பேறு
அவர் அளிக்கும் பரிசு" திபா. 127:3

இறை இயேசுவில் அன்புள்ள மாணவ செல்வங்களே, இன்று உலகம் முழுவதும் குழந்தைகளின் தினத்தை சிறப்பிக்கின்றனர். இந்த நல்ல நாளில் ஒன்று கூடியுள்ள நாமும் சிறப்பிக்கும் இந்நேரத்தில் நம்மையெல்லாம் இந்நாள்வரை பாதுகாத்து வழிநடத்திவரும் இறைவனுக்கு நன்றி சொல்வதோடு நம் அனைவரையும் இறைவன் தன்னுடைய வல்லமையான கரங்களால் ஆசீர்வதிக்க வேண்டுமென்று இன்றைய செபவழிபாட்டில் அனைவரும் சேர்ந்து செபிப்போம். நமது உள்ளத்தையும் உடலையும் ஒருமனப்படுத்தி இறைவனை நம்மிடையே அழைக்க இப்பாடலை பாடுவோம்.

**பாடல்: என்னோட இயேசுவே கொஞ்ச நேரம் பேசுமே...**

**நற்செய்தி முன்னுரை :**
அன்பு செல்லங்களே, இயேசு குழந்தைகளை மிகவும் நேசிக்கிறார். அன்பு, கீழ்ப்படிதல், தாழ்ச்சி, மன்னிப்பு, சேவைமனப்பான்மை இவற்றை தம் போதனையின் கருப்பொருளாக கொண்ட அவர் குழந்தைகளின் மனநிலையைப் புகழ்ந்து பாராட்டி குழந்தைகளுக்கும் விண்ணரசிற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை தன்னுடைய சீடர்களுக்கு விளக்குகிறார். அந்த நிகழ்வினை இப்போது நற்செய்தி வாசகத்தின் வழியாக வாசிப்பதை கவனமுடன் செவிமடுப்போம்.

**நற்செய்தி: மத் 19:13**
விளக்க கருத்து: யாராவது ஒருவர் சிறு கருத்து பகிரலாம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

- ஒவ்வொரு மன்றாட்டையும் முடிக்கும்பொழுது மேடையில் நிற்பவர்கள்மேல் மேலிருந்து உதிரி பூக்களை தூவ வேண்டும்.
- பெற்றோர்கள் ஒரு சிலரை மேடைமேல் கண்களை மூடி தலை தாழ்த்தி நிற்க வேண்டும்.

**பெற்றோர்:** கருணைக் கடலே இறைவா, எங்களைப் பெற்றெடுத்து அன்புகாட்டி எங்கள் தேவைகளை அக்கறையோடு செய்து எங்களுக்காகவே தியாக

வாழ்வினை வாழ்ந்துவரும் எங்கள் பெற்றோர்களை நிறைவாக ஆசீர்வதியும் அவர்களின் வாழ்வில் நம்பிக்கையையும் புத்துணர்வையும் தந்தருளும். இறைவா, எம் பெற்றோர்களின் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகள், சோதனைகள், உடல்நலக்குறைவுகள் இவைகளிலிருந்து விடுதலை பெறவும், அனைத்தையும் தாங்கிக் கொள்ளும் மனவலிமையும் சக்தியையும் அளிக்க வேண்டுமென்றும், பிள்ளைகளாகிய எங்களால் ஆறுதலும், தேறுதலும் மனநிம்மதியும், மகிழ்ச்சியும் எம் பெற்றோர்களுக்கு நாங்கள் அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

- (ஆசிரியர்கள் மற்றும் அரசாங்க தேர்வு எழுதும் மாணவ மாணவிகளில் தலைவர்கள் மேஜைமீது நிற்றல்)

**ஆசிரியர்:** ஞானத்தின் ஊற்றே இறைவா, படிக்கும் பிள்ளைகளாகிய நாங்கள் அனைவரும் நன்றாக படிக்கவும், கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கவும், எங்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நல்ல உடல்உள்ள நலம் தந்து அவர்களின் குடும்பங்களையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும், இவ்வாண்டு அரசாங்கத் தேர்வினை எழுதுபவர்கள் நன்றாக படித்து, நல்ல மதிப்பெண்களுடன் வெற்றிப்பெறவும் உமது அருளையும், ஞானத்தையும் நிறைவாக பொழிந்து உமது தூய ஆவியின் துணையை அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

இரக்கத்தின் இருப்பிடமே இறைவா, பெற்றோரை இழந்து அனாதை இல்லங்களில் வாழ்கின்ற பிள்ளைகளை ஆசீர்வதியும். நீர்தாமே அவர்களுக்கு தாயும் தந்தையுமாக இருந்து வழிநடத்திட வேண்டுமென்றும், வறுமையின் காரணமாக பலவகையான தொழிற்சாலைகளில் உழைப்பிற்கேற்ற வருமானமின்றி உழைத்துக்கொண்டிருக்கும் சிறுவர், சிறுமியர், சாலையோர சிறார்கள், கைவிடப்பட்டோர் ஆகிய அனைவரையும் நீர் ஆசீர்வதித்து அவர்களுக்குப் புதியதோர் வாழ்க்கையை ஏற்படுத்தித் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

- (மாற்றுத்திறனாளிகளான மாணவ மாணவியரை மேடையின்மீது நிற்க வைத்தல்)

ஆறுதலின் ஊற்றே இறைவா, மாற்றுத்திறன் கொண்ட அனைத்து பிள்ளைகளையும் நீர் ஆசீர்வதியும். மாற்றுத்திறன் கொண்டோரை இச்சமுதாயம் ஏற்றுக்கொண்டு, அவர்களிடமுள்ள திறமைகளை புரிந்துக்கொண்டு, வாழ்வில் முன்னேற உதவ வேண்டுமென்று செபிக்கின்றோம். குணமாக்கும் வள்ளவரே, அன்று உம் திருமகன் பலரை குணமாக்கியதுபோல இன்று இவர்களின் குறைகளை நீக்கி வாழ்வில் அனைவராலும் மதிக்கக் கூடிய மக்களாக நீர் ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**ஆசிரியர்:** அன்பு மாணவ மாணவிகளே, இறைவன் நம்முடைய வேண்டுதல்களை ஏற்று, நம்முடைய எல்லா தேவைகளையும்,

நிறைவேற்றுகின்றார் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் இந்த செபவழிபாட்டை பாடலோடு நிறைவு செய்வோம்.

**பாடல்: இயேசுவின் கரங்களில் நான் தவழ்கின்றேன்...**

"சிறுபிள்ளைகளைப்போல தம்மை தாழ்த்திக்கொள்பவரே
விண்ணரசில் மிகப் பெரியவர்" மத் 18:4

**ஆசிரியர்:** அன்பு செல்வங்களே, இன்றைய சிறப்பு செபவழிபாடு தற்போது நிறைவடைகிறது. இறைவனோடு ஒன்றித்துள்ள நாம் இப்போது நமது மகிழ்ச்சியை வெளிப்படுத்த சிறிய நிகழ்வினில் பங்கு கொள்வோம்.

(பின் வருவனவற்றில் ஒன்றைத் தேர்ந்துக்கொள்ளலாம்.)

**நேரு இந்தியாவின் முதல் பிரதம மந்திரி - புறா**
நம்மிடையே உங்களையெல்லாம் மிகவும் நேசிக்கும் நேரு சமாதானத்தை விரும்புகிறவர், உலக சமாதானத்தின் அவசியத்தை நிலைநாட்டும் வகையில் இப்போது இந்த புறாவினை வானிலே பறக்க விடலாம்

**இந்து, முஸ்லீம், கிறிஸ்த்தவம் - வேடத்தில் அணிந்துள்ள மாணவர்கள்**
மாணவ மாணவிகளாகிய நம்மிடையே மத வேற்றுமை என்னும் தீய சக்தியை வளரவிடாமல் அனைவரும் இறைவனின் பிள்ளைகள் என்ற எண்ணங்களை நிருபிக்க மூவரும் பலூன்களை பறக்க விடலாம்

**அன்னை தெரேசா**
இன்றைய தலைமுறையினரின் புனிதையான இவர்கள் மாணவ மாணவியர்களிடையே இரக்கமும், பிறர் சேவையும் வளரவேண்டுமென்று நம்மை ஊக்குவிக்க இந்த பலூனை வானில் பறக்க விடலாம்

**அப்துல்கலாம்**
பள்ளிக்குழந்தைகளை அதிகம் நேசித்த இவர் ஒவ்வொரு மாணவ மாணவியரும் எதிர்காலத்தில் ஓர் சிறந்த விஞ்ஞானியாகவோ, அல்லது ஆற்றலும் அறிவும் நிறைந்தவர்களாக கல்வி கற்று வாழ்வில் உயரவேண்டுமென்று வாழ்த்தி இந்த பலூனை பறக்க விடலாம்.



# அருளாளர் மதலேனா மொரானோ

திருப்பலி
15.11.2025

**முன்னுரை**

*திரு. ஜான் அலெக்ஸ்*

அன்பானவர்களே, அருளாளர் மதலேனா மொரானோ 1847ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் நாள் தூரின் மாநகரில் உள்ள கியேரி என்னும் கிராமத்தில் பிறந்தார். இவர் தன் இளம் வயதிலேயே தனது கிராமத்து சிறார்களுக்கு

நற்போதனைகளைக் கற்றுக்கொடுத்தார். இதுவே பிற்காலத்தில் சலேசிய சபையில் இவர் ஆற்றிய ஆசிரியைப் பணிக்கு பயிற்சியாக இருந்தது. தான் புதுநன்மை வாங்கிய நாளன்றே இறைவனுக்குத் தன்னையே அர்ப்பணிக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருந்தார். தொன் போஸ்கோவின் பயணத்தில்தான் புனிதமாகும் வரை வாழ வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடினார். இவர் சிசில்கு என்ற தீவில் 1881ஆம் ஆண்டு இளையோருக்காக, குறிப்பாக உழைக்கும் இளம் பெண்களுக்காக கல்விப் பணியை ஆற்றினார். "ஒரு பார்வை மண்ணகத்தையும் பத்து விண்ணகத்தையும் நோக்கிய வண்ணம்" பயிலகங்கள், கல்விக்கூடங்கள், ஆரட்டரி, விடுதிகள் மற்றும் தையற் கூடங்களையும் தீவு முழுவதும் ஆன்ம தாகம், பணி ஆர்வம், தம் நிறுவனங்களில் உருவாக்கிய அன்பான சூழல் ஆகியவை பல இளம் பெண்களைத் துறவற வாழ்விற்குப் பெரிதும் தூண்டியது. இவரது அருமையான மேய்ப்புப் பணியை பல்வேறு ஆயர்கள் பாராட்டி, தங்களது மறைமாவட்டங்களிலும் மறைக்கல்விப்பணி, மறைப்பரப்புப்பணி ஆகியவற்றை மேற்கொள்ள இவருக்கு அழைப்பு விடுத்தனர்.

இவர் கத்தானியா என்ற இடத்தில் இருக்கும்போது புற்று நோயினால் தாக்கப்பட்டு, 1908ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். "எனது சுயநலத்தினால் இறைவனுடைய திட்டத்திற்கு எதிராக ஒருபோதும் செயல்பட மாட்டேன்" என்று இவர் எடுத்துக்கொண்ட தீர்மானத்தால் கடைசிவரைக்கும் உறுதியாக நிலைத்திருந்தார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை 1994ஆம் ஆண்டு நவம்பர் 5ஆம் நாள் கத்தானியா என்ற நகரிலேயே அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவரது பிறந்த நாளையே திருஅவை நினைவு நாளாகச் சிறப்பிக்கின்றது.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. மறை உண்மைகளாலும், அருள் அடையாளங்களாலும் புனிதமாகத் திகழும் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களுக்கு தூய ஆவியின் வல்லமையைப் பொழிந்து, புனிதத்துவத்தை மக்களிடையே பிரதிபலிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அருளாளரான மதலேனா மொரானோவின் எடுத்துக்காட்டான வாழ்வினால் ஒவ்வொரு சலேசிய சகோதரியும் தங்களது அர்ப்பண வாழ்வின் நெறிமுறைகளுக்கேற்ப பிரமாணிக்கமாக வாழ்ந்து, தாராள உள்ளத்தோடு இளையோருக்குப் பணி செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. உம்மால் தேர்ந்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு குடும்பமும் நற்செய்தி அறிவிக்கும் கல்விக் கூடங்களாகவும், இறைப்பணியைத் தொடரும் துறவற வாழ்வின் பிறப்பிடமாகவும் திகழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# பொதுக்காலம் 33ம் ஞாயிறு

திருப்பலி
16.11.2025

## முன்னுரை

*திருமதி. ராணி சம்பந்தன்*

I. *மலா. 4: 1-2* II. *2தெச. 3: 7-12* *லூக். 21: 5-19*

இறையேசுவின் இனிய இறைச்சமூகமே, இன்று பொதுக்காலம் 33ம் ஞாயிறை நாம் சிறப்பித்துக் கொண்டிருக்கின்றோம். இன்றைய முதல் வாசகத்தில் மலாக்கியாவில் ஆண்டவர் கூறும் கருத்து, வருங்காலங்களில் ஆண்டவரின் சினம் கொழுந்துவிட்டு எரியும் ஆணவத்துடன் செயல்படும் கொடுமைக்காரர்களின் வேர்களையோ, இணங்களையோ விட்டு வைக்காமல் வீழ்த்தப்பெறுவர் என்றும், ஆண்டவருக்கு அஞ்சி நடக்கும் நல்லவரின்மேல் அவரின் நலம்தரும் மருந்தாகவே இருக்கும் என்றும் கூறுகிறார். இக்கருத்தை ஒட்டியே ஆண்டவரின் அறிவுரையாக புனித பவுல் 2ம் தெசலோனிக்கருக்கு எழுதும் மடலிலும், எவரும் சோம்பித்திரியாமல், தமக்கு வேண்டியதை எவரிடமும் இலவசமாய் பெறாமல், தாமே உழைத்து பெறவேண்டும், அனைவருக்கும் முன்மாதிரியாக வாழவேண்டும் என்று கூறியுள்ளார்.

"உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது" என்ற கூற்றின்படி செயலாற்ற வேண்டும். பிறர் செய்யும் வேலைகளிலும் தலையிடுதல் ஆகாது என்ற ஆண்டவரின் கட்டளைகளாக கூறுகிறார். நற்செய்தியாளர் லூக்கா ஆண்டவரின் எச்சரிக்கைகளை அறிவிக்கிறார். நாட்டை எதிர்த்து நாடும், அரசை எதிர்த்து அரசும் செயல்படும், போலிபோதகர்களும் நானே என்று கூறிக்கொண்டு திரியும் வேளையில் போர் முழக்கங்களும், பெரிய நிலநடுக்கங்களும் வரும் ஆண்டவரின் பெயரால் செயல்படும் அனைவருக்கும் பல இன்னல்கள் வரும், நண்பர்களிடையேயும், குடும்பத்தாரிடையேயும் பல பிரச்சனைகள் உருவாகும். இதற்கெல்லாம் அஞ்சாமல் மனஉறுதியோடு வாழ வேண்டுமென்றே கூறுகிறார். ஆகவே, இறுதிநாளில் ஆண்டவர் தரும் தீர்ப்பு எப்படியிருக்கும் என்பதையும் அவரின் அறிவுரையையும் ஏற்று அதன்படி நடக்க வேண்டுமென்பதையும், அவரின் எச்சரிக்கைகளை ஏற்றுக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பதையும் நினைவில் கொண்டு இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நீதியின் வேந்தனே இறைவா, திருஅவையின் தலைவரே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், கர்தினால்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். உமது வல்லமையால், பணியில் ஏற்படும் பிரச்சனைகள், தொந்தரவுகளை நீரே வழிநடத்தி பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. ஞானத்தின் நிறைவே எம் இறைவா, இன்றைய காலச்சூழலில் வாழும் எங்கள் அனைவரையும் உம் கரத்தில் ஒப்படைக்கின்றோம். உலகிகெங்கும்

ஊழல், கொலை, கொள்ளை, ஏமாற்றுவேலை நடந்துக்கொண்டிருக்கும் இச்சூழலில் நாங்கள் விழிப்போடிருந்து, இதுபோன்ற பலவிதமான செயல்களில் சிக்கித் தவிக்காமல், ஒவ்வொன்றையும் தைரியமுடன் எதிர்நோக்கும் பரந்த உள்ளத்தை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாப்பின் இறைவா, இப்பரந்த உலகில் வல்லரசுநாடுகளுக்கிடையே ஒன்றையொன்று எதிர்த்து போராடும் நிலைமாறி மக்களினம் பாதுகாப்புடனும், அமைதியுடனும் வாழ நாட்டின் தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கட்டுப்பட்டவர்களாக அமைதியாக வாழும் நல்லுள்ளத்தை தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, நம்பிக்கையிழந்து, உடல்வலுவிழந்து, உயிர்த்துடிப்பு ஒன்றையே பற்றிக்கொண்டு போராடுவோரையும், மருத்துவமனையில் நோயால் வாடுவோரையும், இல்லங்களில் கவனிப்பாரின்றி தவிப்போரையும், வயதானவர்களையும் உமது சித்தத்தினால் முழு சுகமளித்து, அவர்களின் மனதில் நீர் என்றும் நிலைத்திருக்கும் தகுதிப்பெற்றவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# புனித பேதுரு பவுல் ஆலயம் நேர்ந்தளிப்பு

**திருப்பலி**
**18.11.2025**

## முன்னுரை

*திரு. ராஜா*

"ஆலயத்திற்கு அருகிலிருப்பவர் இறைவனை தரிசிக்க இறுதியாகத்தான் வருவர்"

அன்புக்குரியவர்களே, வாழ்வு வரலாறாக மாறுகிறது. வரலாறு வாழ்வாக மாறவேண்டும். இப்படித்தான் புனித பேதுருவும் பவுலும் வாழ்ந்தார்கள், இறை இயேசுவுக்கு சான்று பகர்ந்தார்கள், துணிவோடு யாரும் அறிவிக்காததை புனித பவுல் அறிவித்தார். நான் இயேசுவாகவே வாழ்கிறேன் என்று, பேதுருவோ அதைவிட மேலாகச் சென்று மரித்தார். இதைத்தான் இன்று வாழ்வோருக்கு இப்பேராலய விழா பறைசாற்றுகிறது.

இதன் வரலாற்றை பார்ப்போம். உரோமையில் புனித பேதுருவின் கல்லறையின்மேல், வத்திக்கான் குன்றின் அடிவாரத்தில் எழுப்பப்பட்ட சிற்றாலயம் 83ம் ஆண்டில் திருத்தந்தை புனித அனனாகளீட்டாசு என்பவரால் கட்டப்பட்டது. இங்குதான் புனிதரின் திருப்பண்டங்கள் புனிதமாக வைக்கப்பட்டுள்ளன. நாளடைவில் மாமன்னன் கான்ஸ்டான்டைன் மிகப்பெரிய பேராலயம் ஒன்றை அதே இடத்தில் நிறுவினார். 16ம் நூற்றாண்டில் உலகப் புகழ் பெற்ற மைக்கேல் ஆஞ்சலோவின் யுக்தியின்படி இப்போது காட்சியளிக்கும் பேராலயம் எழுப்பப்பட்டது. 50,000 பேர்களுக்கு இடமளிக்கக் கூடிய இப்பேராலயத்தை இதே நாளில் திருத்தந்தை 7வது அர்பன் புனிதப்படுத்தினார்.

திருத்தந்தை புனித அனாக்ளீற்றரசு புனித பவுலின் நினைவாக வேறொரு பேராலயம் எழுப்பினார். ஒசுடியா நகர் நோக்கிச் செல்லும் சாலையில் இது

அமைந்துள்ளது. 395ல் கட்டப்பட்ட இப்பேராலயம் 400 அடி நீளமானது. இதற்கு தியடோசியன் பேராலயம் என்னும் பெயர் சூட்டப்பட்டது. 1823ல் பெரியதோர் நெருப்பு இவ்வாலயத்தை சேதப்படுத்தவே இதற்கு முன் இருந்ததைவிட அதிக கம்பீரமாக புதுப்பிக்கப்பட்ட பேராலயம் இந்நாள் வரை காட்சியளிக்கிறது. 1854ல் அன்னை மரியாவின் அமல உற்பவம் பிரகடணப்படுத்தப் பெற்ற நாட்கள் கழித்து இவ்வாலயம் திருத்தந்தை 9ம் பத்திநாதரால் அர்ச்சிப்பு பெற்றது. நாமும் அந்த ஆலயங்களே, மூவொரு இறைவன் நமது ஆன்மாவை கோவில் கொள்வதால், நாம் அதற்கு எத்தகைய மதிப்புத் தரவேண்டும். தொலைவில் உள்ளோமா அல்லது அருகில் உள்ளோமா? புனிதத்தில் வளர்ச்சி பெற வேண்டும் என்பதை சிந்திப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பு இறைவா, மனிதம் புனிதமாக வாழ இறைவன் அழைத்தார். அதையே இன்றுள்ள எம் திருத்தந்தை லியோ தனது வாழ்வின் வழியாக அறைகூவல் விடுக்கிறார். ஆகவே இறைவா எம் திருத்தந்தைக்கு நீர் அரணும் கோட்டையுமாக இருந்து பாதுகாத்து உம் வல்லமையால் நிரப்பி வழிநடத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. ஆற்றலே இறைவா, எம் திருஅவையின் பணியாளர்களாகிய கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் இறை வழிகாட்டுதலின்படி வாழ்ந்து நல் ஆலயங்களாக மாற வேண்டிய அருளைப்பொழிந்து காத்திட உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கமே உருவான இறைவா, எமது பங்கு, மறைமாவட்டம், மறைவட்டம், தமிழக திருஅவை, இந்திய அகில உலக திருஅவை அனைத்து அதிலுள்ள மக்களும், இன்பத்திலும் துன்பத்திலும் இறை இயேசுக்கு சான்று பகர்ந்து வாழ்ந்து உயர்ந்த ஆலயமாய் கோபுரமாய் வாழ்வில் உயர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. வரங்களை வழங்கும் வள்ளலே எம் இறைவா, கையிலிருப்பதை விடுத்து தூர இருக்கும் கனவு உலகை நம்பி ஏமாந்து போவதுபோல் எங்கள் வருங்கால தலைவர்களாக வேண்டிய இருபால் வாலிபப் பிள்ளைகள் அனைவரும் தீயவற்றிற்கு அடிமையாகாமல் தூய வாழ்க்கை வாழ்ந்து புனித பேராலயங்களாக திகழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# தூய கன்னி மரியாவைக் காணிக்கையாக அர்ப்பணித்தல்

**திருப்பலி**
**21.11.2025**

## முன்னுரை

*திருமதி. ராணி சம்பந்தன்*

அன்பார்ந்த இறைமக்களே, இன்றைய தினத்தை திருஅவையானது தூய கன்னிமரியாள் தேவாலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட தினமாக சிறப்பிக்கிறது. தனது 3 வயதிலேயே தூய கன்னிமரியாள், புனித

சுவக்கின் அன்னம்மாள் இருவருடனும் தேவாலயம் சென்று அங்கு இறைவனுக்கு காணிக்கையாக அர்ப்பணமாக்கப்பட்டிருக்கிறாள்.

அக்காலத்தில் யூத மக்கள் தங்களுக்கு பிறக்க இருக்கும் குழந்தைகளை கடவுளுக்கு காணிக்கையாக சேவைக்கென்று கையளிப்பதாக வாக்குறுதி அளிப்பார்கள். குருவிடம் ஒப்படைத்த பின் குரு கடவுளின் சேவைகளுக்கு அதாவது திருவழிபாட்டு ஆராதனை சடங்குகளில் பங்கு பெறும் பயிற்சிகளுக்கு உட்படுத்தப்பட்டு கடவுளுக்கு சேவை புரிவார்கள். இவ்வாறே தூய கன்னிமரியாளும் தன்னை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணம் செய்தார். தன் தாய் தந்தையரை விட இறைவனை அதிகமாக நேசித்தார்.

6வயதில் தந்தை மரித்து, 8வயதில் தாயும் மரித்தவுடன், பன்னிரண்டு வயது வரை ஆலய பணிகளில் பங்குபெற்று பின் பாதுகாவலராக புனித சூசையப்பர் நியமிக்கப்பட்டு இறைவனின் சேவையில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டவர்தான் நமது அன்னை தூய கன்னிமரியாள். இவ்விழாவை கிரேக்க மக்கள், இறைவனின் அன்னை ஆலயத்தில் நுழைந்த விழா என்று கொண்டாடுகின்றனர். இவ்விழா முதலில் கி.பி. 600ம் ஆண்டிலே கிழக்கு பக்க மக்களால் சிறப்பிக்கப்பட்டு பின்னர் கி.பி. 1600ம் ஆண்டில் தான் உலகெங்கும் கொண்டாடத் தொடங்கியது. பெற்றோரைவிட இறைவனை அதிகமாக நேசித்த நம் அன்னையை பிதாவாகிய தந்தை, இயேசுவின் அன்னையாக்கினார். நாமும் நமது அன்னை வழியில் இறைவனை அன்பு செய்து நம்மையே அன்னையிடம் அர்ப்பணித்து ஆசிபெற இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் தலைவரே எம் இறைவா, தன் ஒரே மகனையே சிலுவைச்சாவுக்கு கையளிக்கும் அளவுக்கு உம் சித்தத்தை நிறைவேற்றிய அன்னைமரியாள் விசுவாசத்தை, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் பொழிந்து அர்ப்பண வாழ்வு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. தியாகத்தின் அர்ப்பணமே இறைவா, "இதோ உன் தாய்" என்று மரணத்தருவாயில் சிலுவையில் தொங்கியபடி வாக்குரைத்ததால் உம் தாயான அன்னை மரியாளின் அன்புக்கு அடிப்பணிந்து அவரை போற்றவும் பயபக்தியுடன் வணங்கவும் மன எழுச்சியை தரவேண்டுமென்று புனித கன்னிமரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாப்பின் இறைவா, இப்பரந்த உலகின் சூழலில், குடும்ப வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகள், தீராத கவலைகள், தோல்விகள், நோய்கள், கடன்கள் இவைகளை சந்திக்கும்போது உமது தாயின் அர்ப்பண உணர்வு எங்களை ஆட்கொள்ளவும் உம் தாயின் பரிந்துரையால் நோய்கள் அகலவும் தூய கன்னி மரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.



# புனித செசிலியா விழா

திருப்பலி
22.11.2025

## முன்னுரை

*திரு. ஹென்றி ஸ்டீபன்*

இன்றைய திருப்பலிக்கு வருகை தந்திருக்கும் இறையன்பர்களே, புனித செசிலியா விழாவை திருஅவை கொண்டாட நம்மை அழைக்கிறது. இவர் உரோமையில் பிறந்தவர். சிறுவயதிலேயே தன் கன்னிமையை கடவுளுக்கு அர்ப்பணித்ததால் திருமணம் செய்ய விரும்பவில்லை. "கடவுளின் தூதர் என்னை அன்பு செய்கிறார் அவரே எனது உடலை துணிச்சலுடன் காத்துக்கொள்கிறார்" என்று கூறி கற்பு நெறியில் வாழ்ந்து வந்தாள். இவரது விசுவாசத்தையும் இறைபக்தியையும் அறிந்த உரோமை ஆளுனன் தனது அதிகாரி மூலம் செசிலியாவை சிறைப்படுத்தினான். பல கொடிய சித்திரவதைகளை பெற்றாலும், இயேசுவின் புனித பெயரை அறிக்கையிடுவேன், அவரை மறுதலிக்கமாட்டேன் என்று கூறியதால் கழுத்து வெட்டப்பட்டு தன் ஆன்மாவை இறைவனிடம் கையளித்தாள். கி.பி. 230ம் ஆண்டில் மறைசாட்சியாக மரித்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதன்பின் இவரது பேரும் புகழும் உலகம் முழுவதும் பரவியது. உரோமையில் 5ம் நூற்றாண்டில் இவரது பெயரால் ஒரு பேராலயம் கட்டப்பட்டது. மேலும் ஆலய பாடற்குழுவினரின் பாதுகாவலி என்று இவர் அழைக்கப்பட்டார்.

இன்றைய திருப்பலி நற்செய்திக்கேற்ப இறைவன் நமக்கு கொடுத்த திறமைகளை இம்மண்ணுலகில் பயன்படுத்தாதவர் விண்ணுலகில் கணக்கு கேட்கப்படுவார். திறமைகள் இறைவனால் மனிதனுக்கு அளித்த அருட்கொடைகள். இதனை பிறரும் அனுபவித்து வாழ உதவி செய்வோம். இது இறைவனின் விருப்பம். அதனால் பெற்ற கொடைகளை பாரபட்சமில்லாமல் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் கருவிகளாக நாம் மாற இத்திருப்பலியில் செபிப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. என்றும் வாழும் இறைவா, உமது திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் மக்களை நிறைவாழ்வுக்கு அழைத்துச் செல்லும் பணியைச் சிறப்பாக செயலாற்றிட தேவையான வரங்களை பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் இறைவா, உம்மிடமிருந்து கருணையையும் அன்பையும் கொடையாக பெற்று மகிழும் நாங்கள் எங்களுக்கு எதிராக குற்றம் செய்தவர்களை தாராள மனதுடன் மன்னிக்கக் கூடிய மனப்பக்குவத்தை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பு இறைவா, இளைஞர்கள் உலகின் நவீன கலாச்சாரத்தில் மூழ்கி, பொழுது போக்கிற்கும், பணத்திற்கும் அடிமையாகி தங்கள் வாழ்க்கையை பாழாக்கி விடாமல் பெரியவர்கள் மற்றும் வழிநடத்துபவர்களின்

சொல்லுக்கு மதிப்பளித்து இறைபக்தியில் நிலைத்து வாழ அருள்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. புகழ்ச்சிக்கும் போற்றுதலுக்கும் உரிய இறைவா, ஆலய பாடற்குழுவினரையும், மற்றும் நல்ல குரல் வலிமை உள்ளவர்களையும், இசைக்கருவிகளை மீட்டுபவர்களையும் நிறைவாய் ஆசீர்வதியும். இவர்கள் பெற்ற இசை திறனின் மூலம் உம்மை போற்றி புகழ்ந்து பாடவும், அதன் மூலம் தங்களையும், இறைமக்களையும் உம்பால் ஈர்க்கவும் வேண்டிய இசை ஞானத்தையும் தூய உள்ளத்தையும் அருளவேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

# கிறிஸ்து அரசர் பெருவிழா

**திருப்பலி**
**23.11.2025**

## முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

I *எசா. 34: 11-12,15-17*    II *1கொரி. 15: 20-26,28*    *மத். 25: 31-46*

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று திருவழிபாட்டு ஆண்டின் கடைசி ஞாயிறு அனைவருக்கும் கிறிஸ்து அரசரின் பெயரால் வாழ்த்துக்கள். இன்றைய நற்செய்தி வாசகத்தில் சவுலும் தாவீது அரசராக திருப்பொழிவு செய்து முடியாட்சி தொடங்குகிறது. ஆட்சிகள் மாறி காட்சிகள் மாறும்பொழுது மனிதனின் பாவங்களும் பெருகி போகின்றது. அந்த இருளின் அதிகாரத்திலிருந்து விடுவிக்க ஒளியமயமான உரிமைப்பேற்றில் பங்குபெற தன் அன்பான மகனின் ஆட்சிக்குட்படுத்தினார். அவரது ஆட்சி மண்ணக முடியாட்சியைப்போல் அல்லாமல் விண்ணோரும் மண்ணோரும் மண்டியிட நீதியுள்ள வெற்றி வேந்தரின் எளியோருக்கான ஆட்சி. அரசர் என்பதற்கும் அரசுரிமை என்பதற்கும் புதிய அத்தியாயத்தை எழுதியவர். அரசர் என்பவர் ஆட்சியாளுபவர், அதிகாரம் செலுத்துபவர் என்ற சிந்தனையை மாற்றி அன்பு செய்பவர். பணிவிடைபுரிபவர் என்ற புதிய சிந்தனையை கொடுக்கின்றவர். இயேசு கிறிஸ்து எந்த இடத்திலும் தன்னை அரசர் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை. தான் இறைசித்தத்தை நிறைவேற்ற வந்தவர், நிலையில்லா மண்ணக வாழ்வின் பொருட்டு செல்வம் அழியவல்லது, அழியா நிலைவாழ்விற்கு ஆயத்தப்படுத்தினார். அதற்கு யூதகுலத்தின் மதக்குருக்கள் அவருக்கு கொடுக்கப்பட்ட பெயர் மெசியா, நீ யூதர்களின் அரசரானால் உன்னைக் காப்பாற்றிக்கொள் என்றனர்.

இறுதியாக இவன் யூதரின் அரசன் என்றே அவரின் சிலுவையில் எழுதினார்கள். இவையனைத்தும் இயேசு அரசர் என்பதை அறிவிக்க இறைச்சித்தம் நிறைவேற்ற உதவியது. இயேசு கிறிஸ்து விண்ணக அரசராக உயிரோடு விண்ணகம் எடுத்துக்கொள்ளப்பட்டார். நீதித் தீர்ப்பு வழங்கி மீண்டும் புதிய உலகைப் படைத்து ஆட்சி செய்ய வருவார். அவர் ஒருவரே மூவுலகிற்கும் அரசர் என்றென்றும் ஆட்சி செய்பவர். தன்னைத் தானே வெற்றிக்கொண்டு தரணியையும் வெற்றிக்கொண்டு தனித்துவமிக்க அரசராக

திகழும் இயேசுகிறிஸ்துவின் அரசர் தன்மையை உள்வாங்கி அவற்றை நம் வாழ்வில் செயலாக்குவதன் மூலம் கிறிஸ்துவின் விண்ணக ஆட்சியுரிமையில் பங்கேற்க வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நீதியின் அரசரே எம் இறைவா, விண்ணரசை மண்ணில் நிலைநாட்ட , மாந்தர் அனைவரையும் இறையரசுக்குள் வழிநடத்திச் செல்ல உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் மண்ணக வாழ்வில் நாட்டமற்றவர்களாக வாழ்ந்திடவும் எவ்வித நீதியின் தீர்ப்புக்கும் உள்ளாகாமல் கடவுளுக்கு அஞ்சி, இறையேசுவின் ஒளியில் நடந்திட தேவையான வரங்களை அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அமைதியின் அரசரே எம் இறைவா, மண்ணில் எல்லைகளை பிரித்து, இது எந்நாடு, என் உரிமை சொத்து என்று உரிமைப் போராட்டத்தால் உலகமெங்கும் கலகங்களும், கலவரங்களும், பயங்கரவாதமும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இவர்கள் போராட்டம் நிலையில்லா மண்ணக வாழ்விற்கானது என்பதை உணரச் செய்யும் நிலையான விண்ணரசுக்கு தேவையான அன்பையும், அமைதியையும் அளித்து ஆசீர்வதிக்க இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. எங்களையாளும் அன்பு இறைவா, நாட்டையாளும் அரசியல் தலைவர்கள் தங்களின் பதவியின் பொருள் உணர்ந்து தங்களை நம்பி தேர்ந்தெடுத்த நாட்டையும், நாட்டிலுள்ள மக்களின் வளங்களையும், நலன்களையும் பாதுகாத்து ஒரு உன்னத ஆட்சியை செலுத்திட தேவையான இறையச்சமும், இறைஞானமும் பெற்றவர்களாய், சமத்துவ குணம் கொண்டவர்களாய், மதசார்பற்ற மனம் படைத்தவர்களாய் வாழ்ந்திட வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. கருணைக் கடலே எம் இறைவா, எம் வருங்கால தலைமுறையின் நீதியின் அரசர் நீர் ஒருவரே உம் நிலையான இறையரசை உணர்ந்து அவ்வரசை வரவேற்க தங்களை ஆயத்தப்படுத்த தேவையான அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், விடாமுயற்சி போன்ற பண்புகளை பெற்று இறையரசுக்க தகுதியுள்ள பிள்ளைகளாய் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# திருவருகைக் காலம் முதல் ஞாயிறு

திருப்பலி
30.11.2025

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

I. *எசா. 2: 1-5* II. *உரோ. 13: 11-14* *மத். 24: 37-44*

இறையேசுவின் அன்புக்குரியவர்களே, இன்று நாம் திருவருகைக் காலத்தின் முதல் வாரத்தில் அடியெடுத்து வைத்திருக்கின்றோம். கடந்த வழிபாட்டு ஆண்டை நிறைவு செய்துவிட்டு இன்று புதிய ஆண்டைத்

தொடங்குகின்றோம். கிறிஸ்து பிறப்பை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாட தயாரிக்கும் காலமே இத்திருவருகைக் காலம். கடந்த ஆண்டு முழுவதும் இயேசுவின் பிறப்பு, போதனை, இறப்பு மற்றும் விண்ணக அரசராக அவரை நினைத்து தியானித்த காலத்தை இப்போது கொண்டாடுகிறோம். இந்நாளிலே நாம் அனைவரும் சிந்திப்பது புதிய ஆண்டிற்கான தயாரிப்பு மட்டுமல்லாமல் கடந்த ஆண்டிற்கான தயாரிப்பு மட்டுமல்லாமல் பழைய ஆண்டின் அனுபவம் நம்மை எவ்வளவு பக்குவப்படுத்தி இருக்கிறது. இயேசுவோடு இணைந்து செயல்படும்போது நமது வாழ்வு செழிப்பான வெற்றியாக இருக்கின்றதா என்றும் எந்தளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறோம் என்றும் சிந்திக்க அழைக்கிறது.

இன்று மனிதன் தன்னைப்பற்றி சிந்திப்பதில் முழு மூச்சாக செயல்படுகிறான் அதனால் ஆடம்பரமாக வாழவேண்டுமென்று பாவ வாழ்க்கை வாழ்ந்து அழிவுப் பாதைக்கு செல்கிறான். இறைவார்த்தையில் கூறப்பட்டுள்ளபடி பாவவாழ்க்கை வாழ்பவர்களே, இறைவன் வயலில் இருக்கும் இருவரில் ஒருவர் எடுத்துக்கொள்ளப்படுவதும், மற்றவர் விட்டுவிடப்படுவதும், திரிகையில் மாவரைத்துக் கொண்டிருக்கும் இருவரில் ஒருவர் எடுத்துக்கொள்ளப்படுவதும் மற்றவர் விடப்படுவதும் பாவ வாழ்க்கையின் உதாரணமாக கூறுகிறார். ஆண்டவருக்குள் வாழும் குடும்பம் அழிவிலிருந்து பாதுகாக்கப்படும்.

கிறிஸ்தவ சமூகம் அன்றாடக் கவலைகளில் மூழ்கிவிட்டு தங்களின் இறுதி வாழ்க்கையின் நோக்கத்தை மறந்து விடுவர். அவர்களுக்கு வழங்கப்படும் செய்தி “விழிப்பாயிருங்கள் கிறிஸ்துவின் வருகைக்காக காத்திருப்பதே உங்கள் குறிக்கோள்” என்பதை மறவாதீர்கள். கிறிஸ்து எவ்வாறு நம்மை சந்திக்க வருகிறார் என்றால் நாம் பிறருக்கு செய்யும் உதவி பிறரிடம் காட்டும் அன்பு, அக்கறை, பிறர் நலம் பேணல் போன்ற நற்செயல்கள் வழியாகத்தான் இறைவன் நம்மை சந்திக்கிறார். இந்த சந்திப்பு நம் வாழ்வு வளம் பெறவும் இறைவனை சந்திக்க ஒரு தூண்டுதலாகவும் அமையும் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியைத் தொடர்வோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. ஒளியின் தீச்சுடரே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் ஒளியின் பாதையில் வழிநடந்து, மக்களை இறையாட்சிப் பாதையில் வழிநடத்திச் செல்ல தேவையான உடல்உள்ள நலனளித்து, தூய ஆவியாரின் துணையோடு செயல்பட்டு வாழ்வில் ஏற்படும் அனைத்து சிக்கல்களையும், பிரச்சனைகளிலிருந்து கரம்பிடித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வழிகாட்டும் தெய்வமே இறைவா, நாட்டையாளும் தலைவர்கள், அதிகாரங்களை கையிலெடுத்துக் கொண்டு, தவறான தீர்ப்பையும், தான் தோன்றித்தனமான வாழ்க்கையும், சுயநலமான எண்ணங்களையும் களைந்து, தான் மக்களுக்காக பணிசெய்யவே இறைவன் நம்மை

அழைத்திருக்கின்றார் என்ற பரந்த மனதைப் பெற்றவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. மருத்துவர்களுக்கெல்லாம் மருத்துவரான தந்தையே, நாட்டில் பலவிதமான நோய்களாலும், கடன் பிரச்சனைகளாலும், வருமையினாலும் வாடுவோரை நீர் கண்ணோக்கியருளும். மருத்துவமனைகளில், வீடுகளில், தனிமையில் தவிப்போர் மற்றும் ஆதரவற்றோருக்கு தாயும் தந்தையுமாய் இருந்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. இயற்கையின் இருப்பிடமே எம் இறைவா, நீர் படைத்த அனைத்தும் நல்லதெனக் கண்டீர். ஆனால் இன்று அறிவியல் ஆராய்ச்சியின் காரணமாக இயற்கையை அழித்துக்கொண்டு செயற்கையினால் மக்களின் வாழ்வாதாரத்தை சுருக்கிக்கொண்டு வருவதால் விவசாயமும் சீர்குலைந்து போய்க்கொண்டிருக்கின்ற இக்காலக்கட்டத்தில் நல்ல மழையை கொடுத்து விவசாயம் வளம்பெற்று மக்களின் வாழ்வாதாரம் இயற்கை வளங்களால் நலமடைய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## பகுதி-2

# நம்பிக்கையில் வளர...



# கல்லறைத் திருநாள்

*தரும் பாடம்*

*திரு. புல்லோன் ஜோ லூயிஸ்*

உலகில் அழுகையோடுத் தொடங்குகிற பிறப்பு, பலரை அழவைத்து மரணத்தில் முடிக்கிறது. தாலாட்டுப் பாடலோடுத் தொடங்குகிற வாழ்க்கை ஒப்பாரிப் பாடலோடு முடிவடைகிறது. ஒருவருக்கு மட்டுமே (தாய்க்கு மட்டுமே) சுமையாக மலர்கின்ற வாழ்க்கை நால்வர்க்கு சுமையாக மாறி முடிவடைகிறது. தொப்புள் கொடி அறுத்து பிறக்கின்ற உறவு கோடித்துணி உறவோடு முடிவடைகிறது. இத்தனை மாற்றங்களைக் கண்ட மரணம், மாறாதது, அது இயற்கையானது. மறுத்தாலும் யாரையும் விடாது. இந்த மரணம் கடவுளைச் சந்திக்க ஆன்மாக்களின் புறப்பாடாக அமைகின்றது.

படித்தவன்-பாமரன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், பணக்காரன்-ஏழை என்று ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இவ்வுலகில், மரணம் மட்டுமே சமத்துவத்தின் முன்னோடி, வஞ்சனையில்லா ஒன்று. ஏழைக்கு இத்தனை ஆண்டுகள், பணக்காரனுக்கு இத்தனை ஆண்டுகள் என்று பகுத்து வைப்பதில்லை. இளமை, அழகு, அறிவு, உறவு என்று வெளித்தோற்றம் பார்ப்பதில்லை. விருப்பும் வெறுப்பும் மரணத்திற்குக் கிடையாது. மரணம் அனைவருக்கும் என்பது மட்டும் திண்ணம். ஆனால் எப்போது யார் வீட்டுக் கதவைத் தட்டும் என்பது மட்டும் யாருக்கும் தெரியாது.

மனித வரலாற்றிலே முதன் முதலில் மரித்த ஆபேல், கொலையுண்டார். தொ.நூ. 5: 5ல் தான் ஆதாமின் இயற்கையான இறப்புச் செய்தி இடம் பெறுகிறது. தொடர்ந்து 31 திருவசனம் வரை பலர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்து இறந்தனர் என்பதும் இடம் பெற்றுள்ளது. ஆனால் அவர்கள் எங்கே, எவரால், எப்படி அடக்கம் செய்யப்பட்டார்கள் என்ற குறிப்பு இல்லை. தொ.நூ. 23:1-20 வரையிலான திருவசனங்களில் தான் கல்லறை நிலம் பற்றிய செய்தியை முதன் முதலாக அறிய வருகிறோம். **"கல்லறைகள்" (கல் + அறைகள்)** ஆபிரகாம் தன் மனைவி சாராளை அடக்கம் செய்வதற்காக 400 வெள்ளிக்காசுகள் கொடுத்து இவ்விடத்தை வாங்கி அடக்கம் செய்தார். 175 வயதில் இறந்த அபிரகாமும் அதே குகையில் தான் அடக்கம் செய்யப்பட்டார் (தொ.நூ. 25:7-10). தொடர்ந்து தொடக்க நூலில் யாக்கோபின் மனைவி ராக்கேல் பெத்லகேம் என்ற எப்ராத்திற்குச் செல்லும் வழியிலும், ஈசாக்கை அவரின் புதல்வர்கள் ஏசாயும், யாக்கோபும் கிரியாத்து அர்பா என்ற இடத்திலும், அதே இடத்தில் ஈசாக்கையும் அவர் மனைவி இரபேக்காளையும், யாக்கோபின் மனைவி லேயாவையும், யாக்கோபையும் அடக்கம் செய்தனர். யூதாவை அவரின் சகோதரர்களான யோனத்தானும், சீமோனும் மோதயின் நகரில் தங்கள் மூதாதையரின் கல்லறைகளில் அடக்கம் செய்தனர் (1மக் 9:19). குகைகளில், கல்லறைகளில் அடக்கம் செய்தது பற்றி பழைய ஏற்பாட்டில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு யோவானுடைய சீடர்கள் வந்து அவருடைய உடலை எடுத்துச் சென்று ஒரு கல்லறையில் வைத்தார்கள் என்று மாற்கு எழுதுகிறார் (மாற் 6:29). இலாசரின் அடக்கம் பற்றி கூறும் போது "இயேசு அங்கு வந்த போது இலாசரைக் கல்லறையில் வைத்து ஏற்கனவே நான்கு நாட்கள் ஆயிருந்தன" (யோவா11:17). இயேசுவின் அடக்கம் பற்றி நான்கு நற்செய்தியாளர்களும் குறிப்பிட்டுள்ளனர். அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு அவ்வுடலைப் பெற்று மெல்லிய துணியால் சுற்றி தமக்கென பாறையில் வெட்டியிருந்த புதிய கல்லறையில் போய் வைத்தார்" என்று தங்களுக்கே உரிய பாணியில் எழுதியுள்ளனர். திருத்தூதர் பணிகள் எனும் நூலில் லூக்கா, முதல் மறைச்சாட்சியான ஸ்தேவானின் உடலை இறைப்பற்றுள்ள மக்கள் அடக்கம் செய்தனர் என்று குறிப்பிடுகிறார் (தி.ப. 8:12).

ஆபிரகாமின் மனைவி சாராள் முதற்கொண்டு, முதல் மறைசாட்சியான ஸ்தேவான் வரையிலான அனைவரின் இறப்பு, குகை, கல்லறைகளில் அடக்கம் பற்றி பழைய, புதிய ஏற்பாடுகளில் பார்த்தோம். "மரணமே, உனக்கும் ஓர் நினைவு நாள்", இன்று நாம் நவம்பர் 2-ஆம் நாளை, அனைத்து ஆன்மாக்களின் நாளாக அல்லது இறந்தோர் தினமாக சிறப்பித்து வருகிறோம். இந்த நாள் "கல்லறைத் திருநாள் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நினைவு நாள் கல்லறைத் திருவிழா" என வழக்கத்திற்கு வந்தது எப்படி?

திருச்சபையின் தொடக்க காலம் முதல் இரண்டு நூற்றாண்டுகளில் உரோமையில் ஏற்பட்ட வேதகலாபனையில் பலரும் இயேசுவுக்காக இறந்து

அடக்கம் செய்யப்பட்டனர். குறிப்பாக திருச்சபையின் தூண்கள் எனப்படும் புனித பேதுரு மற்றும் புனித பவுலின் கல்லறைகள் மக்கள் விரும்பிச் சந்திக்கும் இடங்களாக மாறின. காலம் செல்லச் செல்ல மறைசாட்சிகளாக இறந்த இவர்களின் கல்லறைகளில் சிற்றாலயங்கள் கட்டி திருப்பலியும் நிறைவேற்றினர். கி.பி மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு, திருச்சபை உரோமையில் வேரூன்ற ஆரம்பித்தப் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் சாட்சிய வாழ்வை நினைவு கூர்ந்து மக்கள் விழாக் கொண்டாடி அவர்களின் கல்லறைகளைச் சந்தித்து வந்தனர். ஆனால் திருச்சபையில் இது ஒரு பொது விழாவாகவோ, அகில உலகத் திருச்சபையின் விழாவாகவோ மாறவில்லை. கி.பி. 998ல், புனித ஓதிலோ என்பவர் குளூனி சபையின் முதல் மடாதிபதியாய் இருந்தார். தன்னுடைய துறவற சபையில் வாழ்வோர், இறந்தோருக்காகச் சிறப்பான செபங்களைச் செய்ய வேண்டும் என்பதற்காக இவ்விழாவை அறிமுகப்படுத்தினார். பதினோராம் நூற்றாண்டில் குளூனி சபையினரின் இவ்வழக்கம் ஐரோப்பிய நாடுகளிலும், இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் மிக விரைவாகப் பரவியது. இறந்த ஆன்மாக்களுக்காக மன்றாடும் இவ்விழாவைத் தாய் திருச்சபை 13-ஆம் நூற்றாண்டில், அனைத்துலகின் விழாவாகக் கொண்டாட அனுமதி வழங்கியது.

இந்த கல்லறைத் திருவிழா பல உண்மைகளை நமக்குப் பாடமாகத் தருகிறது. கல்லறைகள் நமது உணர்வுகளின் பெட்டகங்கள், அவற்றை மயானம் என்று நாம் அழைப்பதில்லை. அழகாக, கல்லறைத் தோட்டம் என்றே அழைக்கிறோம். இந்தக் கல்லறைகள் இறைவன் அமைத்துக் கொடுக்கும் ஊஞ்சல் தொட்டிகள். பிரபஞ்சத்தின் அசைவுகளால், அதை ஆட்டி இறைவன் தன் குழந்தைகளை உறங்கச் செய்கிறார். உறங்கும் தம் மக்களை, ஒருநாள் அவர் விழிக்க வைப்பார். வானதூதர்கள் புடைசூழ அவர்கள் விண்ணுலகுக்கு அழைத்துச் செல்லப்படுவர். கல்லறையில் நிலவும் அமைதி, நம்மில் நுழைகிறது. நமது உள் ஆழத்தில் நுழைகிறது. இவ்வுலக வாழ்வு இறப்பில் முடிகிறது. ஆனால் கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொண்டவர்க்கு இது மறுஉலக வாழ்வின் நுழைவாயிலாக மாறுகிறது.

- நாம் கல்லறையில் கால் வைக்கும்போது, நமக்கும் விளக்கு வைக்க யாராவது வரும் காலம் தொலைவில் இல்லை என்னும் நினைவு மறையாமல் எழச் செய்கிறது. ஆம்.. "இன்று நீ, நாளை நான்"- என நமக்கு உணர்த்துகிறது.
- கல்லறையில் ஒன்று கூடி செபிப்பதும், திருப்பலி நிகழ்த்தப்படுவதும் அதன் புனிதத்தை மற்றவர்க்கு எடுத்துகாட்டுகிறது.
- மெழுகுத்திரிகளின் ஒளி வெள்ளத்திலே, மலர் மாலைகளின் குவியலிலே, சாம்பிராணிப் புகையின் நறுமணத்திலே, நமக்கு ஆன்மீகச் சிந்தனைகள் நம்மிடையே உருவாக்குகின்றன. வாடா மலராக, அணையா திரியாக, குறையா நறுமணமாக நம் வாழ்வு மாற வேண்டும் என வாழ்வின் பொருளை உணர்த்துகிறது.
- உன் வாழ்வு சிறப்பாக கருதப்பட வேண்டுமானால் பசித்தவருக்கு உணவு,

தவித்த வாய்க்கு தண்ணீர் என்னும் மத்தேயு 25 ஆம் அதிகாரத்தை உங்கள் வாழ்வாக்குங்கள் என உணர்த்துகிறது.

- இதோ உங்களை விட்டுப் பிரிந்தவர்கள் இறைவனோடு என்றென்றும் வாழ்கிறார்கள். அந்த வாழ்வை நினைத்து, இறைவனின் முடிவில்லா வாழ்வுக்கு நன்றி கூறுங்கள் என்று அறிவுறுத்துகிறது. இவர்கள் விட்டுச் சென்ற நினைவுகள், நல்ல செயல்கள், நம்மோடு ஆற்றிய உரையாடல்கள் நம்மை மகிழ்விக்கின்றன, வியப்பில் ஆழ்த்துகின்றன. இவர்கள் நமது வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தும் காரணிகளாகலாம். இவர்களிடம் நம்முடைய குறைகளையும், வேண்டுதல்களையும் எடுத்துச் சொல்லலாம். எங்கள் வேண்டுதல்களைத் தந்தையிடம் எடுத்துச் சொல்லுங்கள் எனலாம். கல்லறைத் திருநாள் இவ்வாறு நமது மனதை மிளிர வைக்கும், சிந்தனையைத் தெளிவாக்கும், புதுவாழ்வுக்கு நம்மை இட்டுச் செல்லும்.

மனிதமே நிலையற்ற வாழ்வு உங்களுக்கு மட்டுமல்ல, கல்லறைகளாகிய எங்களுக்கும்தான். நாங்களும் தகர்க்கப்பட்டு அடிச்சுவடுகள் அழிக்கப்படுவோம். இது நிகழப்போவதோ இறுதித் தீர்வை நாளில். என்னில் உறங்குவோர் உயிர்தெழுவர், துஞ்சினோரின் முதற்கனியாம் இயேசுவின் உயிர்ப்பில் உதித்த உண்மை இது. "இறந்த உம் மக்கள் உயிர் பெறுவர் அவர்களின் உயிரற்ற உடல்கள் மீண்டும் எழும்." (எசா27:19). அன்பு உள்ளங்களே, உதிரத்தால் நம்மோடு உறவுகளாய் பிறந்து, உணர்வில் நம்முடன் உண்டு உறங்கி வாழ்ந்து வரலாராகிப்போனவர்களை வருடம் ஒருமுறை நினைவுகூறும் கல்லறைத் திருநாளில், இவர்கள் நித்திய பேரின்ப வாழ்வில் நுழைந்திட வேண்டுவோம். கல்லறைத் திருநாளில் மட்டுமன்று, எல்லா நாட்களிலும் நினைவில் கொள்வோம். நமக்கும் உயிர்ப்பு உண்டு, நிறைவாழ்வு உண்டு என்று உணர்ந்திடுவோம். இறப்பு நிச்சியமானதுபோல் இறப்பிற்குப் பிறகு இருப்பவரும் நம்மை நினைவு கூறப்போவதும் நிச்சயமான உண்மை. நம் உடலையும் ஆன்மாவையும் காத்துக்கொள்ள மரணத்தின் நினைவு நாளாம் இன்று மறந்திடாது உறுதி எடுப்போம்.



*நீதிமான்களின் ஆன்மாக்கள்*
*கடவுளின் கையில் உள்ளன" (சா. ஞா 3:1)*

*விண்ணகத்தின் பேரின்பமே இறைவா,*
*ஆன்மாக்களின் மீது அளப்பரிய*
*அன்பு கொண்ட ஆண்டவரே! இவ்வுலகில் உயிர்வாழும்*
*ஒவ்வொருவருடைய ஆன்மாவும் உமக்கு மட்டுமே*
*சொந்தமானது. ஏனெனில் "மனித உடலைவிட*
*மனித ஆன்மா மீது தாகம் கொண்டவர் நீரோ!"*
*எனவே இறந்த ஆன்மாக்களின் மீட்புக்காக உம்மிடம்*
*முழங்கால் படியிட்டு வேண்டி நம்பிக்கையோடு*
*நாடி வருகின்றோம். இறந்த ஆன்மாக்களுக்கும்.*
*குறிப்பாக உத்தரிக்கின்ற நிலையில் இருக்கின்ற*
*ஆன்மாக்களுக்கும் முடிவில்லா பேரின்ப வாழ்வைத்*
*தந்தருளும். உமது பேரன்பையும், பேரிரக்கத்தையும்*
*அவர்கள் பெற்றுக்கொள்வார்களாக.*



# கிறிஸ்து அரசர் பெருவிழா

*- ஒரு பார்வை*

*திரு. விக்டர்*

கிறிஸ்து அரசர் பெருவிழாவானது நமது கத்தோலிக்க திருவழிபாட்டு ஆண்டின் பொதுக்காலத்தின் கடைசி ஞாயிறன்று கொண்டாடப்படுகிறது. அதாவது திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறுக்கு முந்தின ஞாயிறு இவ்விழாவானது சிறப்பிக்கப்பட்டு வருகிறது. முதன்முதலாக இவ்விழாவானது திருத்தந்தை 11ம் பத்திநாதர் அவர்களால் 1925ம் ஆண்டு திருச்சபையின் அதிகாரப்பூர்வ விழாக்களில் ஒன்றாக அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து மக்கள் இவ்விழாவினைச் சிறப்பித்து வருகின்றனர். "கிறிஸ்து ஓர் அரசரா?" இவ்வுலகிற்கு அவர் மானிட மகனாக, மீட்பராக, இழந்து போனவைகளைத் தேடி மீட்கிறவராகத்தான் வந்தார். ஆனால் இவைகளையும் தாண்டி "அவர் ஓர் அரசர்" என்பதை திருவிவிலியத்தில் பல பதிவுகளின் வாயிலாக அறிய முடிகிறது. இயேசுவின் பிறப்புச் செய்தி அன்னை மரியாளுக்கு "கபிரியேல்" என்னும் தூதன் வாயிலாக அறிவிக்கப்பட்டது. அப்பொழுது பிறக்கப்போகும் இயேசுவைப்பற்றி தூதன் உரைக்கும்பொழுது "அவர் பெரியவராய் இருப்பார், உன்னத கடவுளின் மகன் எனப்படுவார், அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார்" (லூக் 1:32) என்று கூறி இயேசு அரசர் என்பதை தெளிவுப்படுத்துகின்றார். "அவரது அரசுக்கு முடிவே இல்லை அவர் யாக்கோபின் குடும்பத்தின்மீது என்றென்றும் ஆட்சி செய்வார்" (லூக் 1:33)

என்று சொல்லி இயேசுவின் அரசாட்சிக்கு முடிவே இராது என்பதை வலியுறுத்துகின்றார். மேலும் இயேசு அரசர் என்பதை கி.மு. 500களில் வாழ்ந்த "செக்கரியா" என்னும் இறைவாக்கினர் "மகிழ்ந்து களிகூறு, இதோ உன் அரசர் உன்னிடம் வருகின்றார். கழுதையின்மேல் கழுதைக் குட்டியாகிய மரியின்மேல் ஏறி வருகின்றான் (செக் 9:9) என்று தீர்க்கதரிசனமாக உரைத்தார்". இதைத்தான் இயேசு உலகில் வாழ்ந்த நாட்களில் சீடர்கள் இயேசுவுக்குச் செய்து அவரை கழுதைக் குட்டியின்மீது அமரவைத்து "ஓசான்னா, ஓசான்னா" என்று பாடி அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்று அவர் அரசர் என்பதை உலகரியச் செய்தனர் (யோவா 12: 14-15).

இவற்றை மெய்ப்பிக்கும் விதமாக இயேசுவும் "புதுப்படைப்பின் நாளில் மானிடமகன் தமது மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார்" (மத் 19:28) என்று தம்மைப்பற்றி தமது சீடர்களிடம் எடுத்துரைக்கின்றார். இன்னும் இவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் திருத்தூதர் யோவானுக்கு காட்சி தந்த கடவுள் "நான் வெற்றிபெற்று எனது தந்தையின் அரியணையில் அவரோடு வீற்றிருப்பதுபோல வெற்றிபெறும் எவருக்கும் எனது அரியணையில் என்னோடு வீற்றிருக்கும் உரிமை அளிப்பேன்" (திவெ 3: 21) என்றுரைத்து அவரோடு நமக்கும் அரியணையில் பங்குண்டு என்னும் மகிழ்ச்சியின் செய்தியைத் தருகின்றார். மேற்கண்ட சுருக்கமான சாட்சிய வசனங்கள் மூலமாக இயேசு ஒரு "அரசர்" என்பது ஆணித்தரமாக எண்பிக்கப்படுகிறது. இதனால்தான் இயேசுவை சிலுவையில் அறைவதற்கு அனுமதியளித்த "பிலாத்து" "நாசரேத்தூர் இயேசு யூதர்களின் அரசன்" என்று இயேசுவின் சிலுவையில் எழுதி வைத்தான்.

இயேசு கிறிஸ்து அவர்தான் என்பதற்கு இச்சான்றுகள் போதுமானது என்று எண்ணுகின்றேன். அவர் அரசர் என்றால் அவருக்குரிய சில அடிப்படைத் தகுதிகள் அவருக்கு இருக்க வேண்டும்.

- ஓர் அரசன் தனது மக்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும், மீட்கிறவராக, பாதுகாக்கிறவராக இருக்க வேண்டும்.
- ஓர் அரசன் தனது மக்களுக்கு உணவளிக்கிறவராக இருக்க வேண்டும்.
- ஓர் அரசன் தனது மக்களுக்குத் தேவையான யாவையும் செய்து அவர்களைப் பராமரிக்கிறவராக இருக்க வேண்டும்.
- ஓர் அரசன் தனது மக்களைச் சரியான பாதையில் வழிநடத்துகிறவராக இருக்க வேண்டும்.
- ஓர் அரசன் தனது மக்களை உண்மையிலேயே அன்பு செய்கிறவராக இருக்க வேண்டும்.
- நமது கிறிஸ்து அரசர் எப்படிப்பட்டவராக இருக்கிறார் என்பதைச் சற்று விளக்கமாக ஆராய்வோம்.

**பாதுகாக்கிறவர்**

கிறிஸ்து அரசர் நம்மைப் பாதுகாக்கிறவர், விடுவிக்கிறவர், மீட்கிறவர். இயேசு என்னும் சொல்லுக்கு "மீட்கிறவர்" என்பது பொருள். இயேசு

பெத்லகேமிலே பிறந்தபோது வானதூதர் இடையர்களிடம் சொல்லிய செய்தி. "இதோ மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். உங்களுக்கு மீட்பர் பிறந்துள்ளார்" (லூக் 2:10) என்பதுதான். இந்த அரசர் எவற்றிலிருந்து நம்மை மீட்கிறார்? அல்லது பாதுகாக்கிறார்?

1. நம்முடைய பாவங்களிலிருந்து மீட்டு நம்மைப் பாதுகாக்கிறார் (1யோவா 1:7)
2. நம்மீதுள்ள சாபங்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறார் (கலா3:13)
3. பிசாசின் பிடியிலிருந்து நம்மை விடுவிக்கிறார் (கலா2:14)
4. மரணப் பயத்திலிருந்து நம்மைப் பாதுகாக்கிறார் (எபி 2:15)
5. வியாதிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறார் (1பேதுரு2:24)
6. சமாதான குறைவிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறார் (எபே 2:14)
7. ஏழ்மையிலிருந்து விடுதலை அல்லது பாதுகாப்பு அளிக்கிறார் (2கொரி 8:9) மொத்தத்தில் நமது அரசர் கிறிஸ்து நமது வாழ்வின் எல்லா நிலைகளிலும் நம்மைப் பாதுகாக்கிறவராக இருக்கிறார் என்பதை அறிய முடிகிறது.

**உணவூட்டுகிறவர்**

அரசர் என்பவர் தன்னுடைய மக்களுக்கு உணவூட்டுகிறவராக தட்டுப்பாடின்றி உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்கிறவராக இருக்க வேண்டும். உணவில்லாத மக்கள் சோர்ந்து போவார்கள். இன்றைய உலகில் உள்ள அரசியல் தலைவர்கள் தங்களை வளர்த்துக்கொண்டு மக்களைக் கவனிக்காமல் விட்டதன் விளைவு ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள "சொமாலியா" என்கிற நாட்டு மக்கள் வறுமையின் காரணமாக உண்ண உணவின்றி ஆயிரக்கணக்கில் பசி, பட்டினியால் மடிந்துபோவதை நாம் நன்கறிவோம். ஆனால் நம்முடைய கிறிஸ்து அரசர் நம்முடைய ஆன்ம நலனில் அக்கறைக் கொண்டவராக அதற்குத் தேவையான இறைவார்த்தை என்கிற உணவை நமக்கு வழங்கி நம்மைப் பலப்படுத்துகிறார். "விண்ணிலிருந்து இறங்கி வந்த உணவு நானே, இந்த உணவை யாராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார்" (யோவா 6:51) என்று தம்மைத்தாமே நமக்கு உணவாகத் தந்தார். "வார்த்தை மாமிசமாகி நம்மிடையே குடிக்கொண்டார்" (யோவா 1:14) இயேசுவுக்கு இறைவார்த்தை என்று ஒரு பெயர் உண்டு. அந்த வார்த்தை மாமிசமாகி நம்மிடையே குடிகொண்டது. அதாவது கடவுளின் வார்த்தையை நமக்கு உணவாக வழங்கி நம்மைப் பலப்படுத்துகிறார். வானமும் பூமியும் ஒழிந்தாலும் என்றும் ஒழியாத அழிவில்லாத, உயிருள்ள, ஆற்றல் மிகுந்த ஊனையும், எலும்பையும் ஊடுருவக் கூடிய வார்த்தையை நமக்கு உணவாக வழங்கி நம்மைப் பாதுகாக்கிறார். நாம் வளர வேண்டுமானால் இந்த இறைவார்த்தையாகிய உணவை உண்டேயாக வேண்டும் (1பேதுரு 2:3).

**பராமரிக்கிறவர்**

அரசன் என்பவர் தனது மக்களைப் பாதுகாப்பது, உணவளித்து அவர்களின் எல்லா நலன்களையும் கவனித்து பராமரிக்கிறவராக இருக்க வேண்டும். நமது கிறிஸ்து அரசரும் ஒரு ஆயன் தன் மந்தையைக் காத்து

பராமரிப்பதுபோல் நல்ல ஆயனாக இருந்து நம்மைப் பராமரிக்கின்றார் (யோவா 10:10). "ஆடுகளுக்கு நானே வாசல், என் வழியாய் நுழைவோருக்கு ஆபத்தில்லை. மேய்ச்சல் நிலத்தைக் கண்டுக்கொள்வர். நான் ஆடுகள் வாழ்வை நிறைவாய் பெரும்பொருட்டே வந்தேன்" (யோவா 10: 10-11) என்று கூறி வாழ்வின் எல்லா நிறைவுகளையும் நமக்கு வழங்குகிறார்.

இயேசுவின் பெயர் அதிசயங்களைச் செய்கிறது. இயேசுவின் பெயர் அற்புதங்களைச் செய்கிறது. "நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன். மேலும் நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன்" (யோவா 14:13-14) என்று கூறி நம்மைச் சகல விதத்திலும் பராமரிப்பதாக வாக்களித்துள்ளார். இந்த பராமரிப்பை உணர்ந்த, அனுபவித்த தாவீது அரசர் "உண்மையாகவே என் வாழ்நாளெல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் என்னைப் புடைசூழ்ந்து வரும், நானும் ஆண்டவருடைய இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்" (திப.23:6) என்று பாடியுள்ளார். ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்களைக் கொண்டு 5000 ஆண்களுக்கும், அநேக பெண்கள், பிள்ளைகளுக்கும் உணவளித்த ஆண்டவரின் செய்கை அவர் எவ்வளவு இளகிய மனதை உடையவராக, நம்மேல் பரிவு கொண்டவராக இருந்து நம்மைப் பராமரிக்கிறார் (மத் 14:13:21) என்பதை அறிய முடியும்.

**வழிநடத்துகிறவர்**

அரசன் என்பவர் தனது மக்களை அறநெறிப் பாதையிலும், நல்வழியிலும் செம்மையான வழிகளிலும் வழிநடத்த வேண்டும். நமது கிறிஸ்து அரசர், "நானே வழியும், உண்மையும் வாழ்வும்" (யோவா 14:6) என்று கூறி நாம் யாவரும் அவரது வார்த்தையின் வழி நடக்கிறவர்களாய் இருக்க கற்றுக்கொடுக்கின்றார். "என் ஆடுகள் என் குரலுக்குச் செவிமடுக்கும் நான் அவற்றை நடத்திச் செல்ல வேண்டும்" (யோவா 10:16) என்று கூறி தாம் எவ்வாறு வழிநடத்துவார் என்பதை விளக்குகின்றார். அவரது வழிநடக்கிற நாம் விசுவாசத்தை துவக்குகிறவரும் அதைத் தொடர்ந்து வழிநடத்துகிறவரும் அதை நிறைவு செய்கிறவருமாகிய இயேசுவின்மீது கண்களைப் பதியவைத்து நமக்கென நியமிக்கப்பட்டிருக்கின்ற நம்முடைய ஓட்டத்தைத் தொடர்ந்து ஓடிவரவேண்டுமென்று நமது அரசர் விரும்புகின்றார் (எபி. 12:1-2). நமது அரசர் தமது இரத்தத்தினால் பரலோகத்திற்குப் பாதை அமைத்துக்கொடுத்து (எபி.10:20) அந்த புதிய வழியிலே நம்மை வழிநடத்துகின்றார். அவரது வழி வாழ்வுதரும் வழி, அதிலே நடக்க நம்மை அழைக்கின்றார்.


**அன்பு செய்கிறவர்**

அரசன் என்பவர் தனது நாட்டு மக்களிடத்தில் மிகுந்த அன்புள்ளவராக இருப்பது மேற்கூறப்பட்ட அனைத்தையும்விட அவசியமானதாகும். நமது கிறிஸ்து அரசர் நாம் பாவிகளாய் இருந்தபோதே நமக்காகத் தம் உயிரையே கொடுத்தார். இவ்வாறு அவர் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை விளங்கச் செய்தார் அல்லது எடுத்துக்காட்டியுள்ளார் (உரோ 5:8). கடவுள் மோயீசன்

மூலமாகக் கொடுத்த 10 கட்டளைகள் பல கட்டளைகளாகப் பெருகின. இரண்டே கட்டளைகளாக மாற்றினார். முதலாவது கடவுளை அன்பு செய்ய வேண்டும், இரண்டாவது தன்னைப்போல் பிறரையும் அன்பு செய்ய வேண்டும் (மத் 22:39). இதைச் சொன்ன இயேசு, "நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துங்கள்" (யோவா 13:34) என்று அறிவுரை வழங்கின ஆண்டவர், தம்மை விசுவசிக்கும் எவரும் அழியாமல் நித்திய வாழ்வைப் பெறும்பொருட்டு தம் உயிரையே நமக்களித்து தமது அன்பை வெளிப்படுத்திக் காட்டினர் (யோவா 3:16). இவர் நம்மீது காட்டிய இந்த அன்பை நாம் பிறர்மீது காட்டும்பொழுது நாம் அவரது அதாவது நமது அரசர் இயேசுவின் சீடர் என்பதை மற்ற மக்கள் அறிந்து கொள்வர் (யோவா 13:35).

இப்படியாக, நம்மை பாதுகாக்கிற நம் அரசர், நமக்கு உணவளிக்கிற அரசர், நம்மைப் பராமரிக்கின்ற அரசர், நமக்கு வழிகாட்டி நடத்துகிற அரசர், நம்மை அளவுக்கதிகமாய் அன்பு செய்கிற அரசர், நம்மோடு இருக்கையில் நமக்கென்ன கவலை? அவர் கைக்குள் அடங்கியிருப்போம், அவர் வார்த்தைகளை உணவாக்கிக்கொள்வோம், அவரது பராமரிப்பில் வளர்வோம், அவர் காட்டும் நல்வழியில் நடப்போம், அவரது அன்பில் நிலைத்திருந்து அவரது அரசாட்சியைப் பரப்புகிற மக்களாய் வாழ்வோம்.





சலேசிய மறைசாட்சியர்

# அலோசியஸ் வெர்சிலியா & கலிஸ்துஸ் கரவாரியோ

## இவர்களின் வாழ்வு நமக்கு தரும் பாடம்

*திரு. ஜான் அலெக்ஸ்*

சீன மண்ணில் திருச்சபைக்கு எதிராக பல்வேறு சவால்கள் துன்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்த வண்ணம் இருந்த காலமது. கிறிஸ்துவ மறைப்பணியாளர்கள், கிறிஸ்துவ மக்கள் அங்கு தொடர்ந்து கொல்லப்பட்டனர். அந்த நேரத்தில் தொன் போஸ்கோ, எதிர்கால சீன திருச்சபையின் வளர்ச்சி மற்றும் தனது சலேசிய சீன மறைப்பணியைப் பற்றியதொரு கனவு கண்டார். அக்கனவில் இரண்டு கிண்ணங்களைப் பார்க்கிறார். அவற்றில் ஒன்று வியர்வையாலும் மற்றொன்று சலேசியர்களின் இரத்தத்தாலும் நிரம்பியிருந்தன. அப்படியென்றால் சலேசிய மறைப்பணியாளர்கள் சீன மண்ணில் மறைச்சாட்சிகளாக திகழப் போகின்றார்கள் என்பதை உணர்த்தும் கனவாக அமைந்ததை புனித ஆயர் வெர்சிலியா மற்றும் புனித தந்தை கரவாரியோ இவர்களின் வாழ்க்கையின் மூலம் உறுதிசெய்யப்பட்டதை நாம் பார்க்கலாம்.

சலேசிய குருவான புனித லூயி வெர்சிலியா (1873-1930) இக்கனவு தன் வாழ்க்கையில் நிகழும் என்று சற்றும் எதிர்ப்பார்க்கவில்லை. பக்தியுள்ள பீடச்சிறுவனாக இருந்தபோதும் பின்நாளில் தாம் ஒரு குருவாவோம் என்றும்

நினைத்ததில்லை. மாறாக ஒரு சிறந்த விலங்கியல் மருத்துவராக வேண்டும் என்பதே இவரின் எண்ணம். இதற்கான தேடலின் முடிவில் சலேசிய ஆரட்டரிக்கு வந்தடைந்தார், தொன் போஸ்கோவின் கனிவு, அரவணைப்பில் ஈர்க்கப்பட்டு சலேசிய துறவறத்திற்குள் நுழைந்தார். இறையருளால் சீன மறைப்பணிக்காக செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்ட தந்தை வெர்சிலியாவின் விருப்பம் நிறைவேறியது. 1905ல் சீன மறைப்பணிக்காக முதன்முதலாக ஒரு சலேசிய குழு, தந்தை வெர்சீலியா தலைமையில் அனுப்பப்பட்டது. அங்கு மாணவர் இல்லமும் பள்ளியும் அமைக்கப்பட்டன.

தொன் போஸ்கோவைப் போலவே இவரும் அன்பும் கனிவும் கொண்டவராகப் பணியாற்றினார். சீன மக்கள் நலனில் மிகுந்த ஆர்வமோடு செயல்பட்டார். அரசியல் சூழ்நிலை மாற்றத்தால் தந்தை வெர்சீலியா உட்பட சலேசியர்கள் சீனாவைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாய நிலை. ஆனால் தந்தை வெர்சிலியா தன்னை திடப்படுத்திக் கொண்டார். என்னவானாலும் இந்த மக்களோடுதான் தனது வாழ்வு என்று முடிவெடுத்தார்.

தலைமைத் தந்தையிடமிருந்து தந்தை வெர்சிலியாவுக்கு திருப்பலிக் கிண்ணம் பரிசாகப் கிடைத்தது. அவர் அதை பெற்றுக்கொள்ளும் போது, "சீன மறைப்பணி வளர்ச்சியில் சலேசியர்களின் இரத்தம் வழியும் கிண்ணமாக கனவில் கண்டார் தொன் போஸ்கோ. இன்று இப்பரிசு எனக்கு கிடைத்திருக்கிறது. நான் அதை நிரப்புவேன்" என்று கூறி அர்ப்பணித்தார். காலப்போக்கில் அவர் பணியாற்றும் இடம் மறைமாவட்டமாக உயர்ந்தது. மக்களோடு மக்களாக பணியாற்றுவதில் அதிகம் விரும்பியதால் தன்னை ஒரு ஆயராக நியமிக்க வேண்டாம் என்று தனது தலைமைக்குப் கோரிக்கை வைத்தார். இருப்பினும் அவர் சிறிதுகாலத்திற்கு பிறகு ஆயராக நியமிக்கப்பட்டார். ஆயராக இருந்தாலும் தொடர்ந்து அன்றாடம் மக்களோடு பயணித்து அவர்களை முகமுகமாகச் சந்தித்து தேவையான உதவிகளைச் செய்துவந்தார். நற்கருணையைத் தன் மூலமாக வைத்து தினமும் செபித்தார். அப்போதுதான் தனது மக்களுக்காக அவர்களின் வாழ்வுக்காக தாம் ஒரு மறைச்சாட்சியாக மாறவேண்டிய காலம் நெருங்கிவிட்டதை உணர்ந்தார்.

1922ல் அவரைச் சந்தித்த சில இளம் துறவற சகோதரர்களில் ஒருவர் சீன மறைப்பணிக்காக தாமும் ஆயருடன் வர விருப்பம் தெரிவித்தார். 1924ல் மறைப்பணியாளராக சீனா சென்ற அந்த அருட்சகோதரர் கரவாரியோ ஆவார். 1929ல் ஆயர் வெர்சீலியாவின் திருக்கரங்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். சீனா, திருச்சபைக்கு எதிராக கடுமையாக மாறிக்கொண்டிருந்த காலம் அது. குறிப்பாக தந்தை கரவாரியோ பணியாற்றும் "லின்ச்சோ" மிகவும் கலவரத்திற்குட்பட்ட பகுதி. 1930 பிப்ரவரி 24ல் தந்தை கராவாரியோ, 2 இளம் வேதியார்கள், 3 இளம் பெண்கள் ஆகியோர் அடங்கிய குழுவுடன் ஆயர் வெர்சீலியா, "லின்ச்சோ" சென்றார்.

அப்பயணத்தின் போது வழிக்கொள்ளையர் கூட்டம் அவர்களை முற்றுகையிட்டது. அக்கொள்ளையர்களின் தீயக்கண்கள் குழுவில் இருந்த 3

இளம் பெண்கள் மீது விழ, அப்பெண்களை பாலியல் ரீதியிலும் கொலை செய்யும் நோக்கிலும் கொடியவர்கள் தொடர்ந்து முன்னேறினர். அப்பெண்களையும் மற்றவர்களையும் காப்பாற்றும் பணியில் துணிச்சலாக நின்று போராடினார்கள் ஆயர் வெர்சீலியாவும், தந்தை கரவாரியோவும்.

கொள்ளையர்களால் ஆயர் வெர்சீலியாவும் தந்தை கரவாரியோவும் கடுமையாக தாக்கப்பட்டு பின் காட்டுப்பகுதிக்கு கடத்தப்பட்டனர். அக்கொள்ளையர்களில் ஒருவன், "மற்றவர்களுக்காக போராடுகிறீர்களே உங்கள் உயிர்மீது ஆசையில்லையா? சாகப்போவதை நினைத்து பயமில்லையா?" என்று கேட்டான். அதற்கு ஆயர் வெர்சீலியா, "நாங்கள் குருக்கள். எதற்காக சாவைக்கண்டு பயப்பட வேண்டும்?" என்றார். மரணம் நிச்சயம் என்றாகிவிடவே இவ்விரு துறவிகளும் இறுதியாக ஒருவருக்கொருவர் ஒப்புரவு அருட்சாதனம் செய்துகொண்டனர். ஒருவழியாக அந்த 3 இளம் பெண்கள் உட்பட மற்ற பிணைக்கைதிகளையும் கொள்ளையர்கள் பத்திரமாக விடுதலை செய்தனர். பிறகு தந்தை கரவாரியோவும் ஆயர் வெர்சீலியாவும் சுட்டுக்கொள்ளப்பட்டனர்.

மரண வாசலில் தவித்த 3 இளம் பெண்களின் இதயங்களில் இந்நிகழ்வு மாறா தழும்பை ஏற்படுத்தியது. இந்த 3 மகள்களுக்காக 2 தந்தையர்கள் தங்கள் வாழ்வைத் தியாகம் செய்ததை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆம் அன்பர்களே, ஆயர் வெர்சிலியாவும் தந்தை கரவாரியோவும் தங்களது இரத்தத்தால் கிண்ணத்தை நிரப்பிவிட்டனர். பிறர் வாழ தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர். அக்டோபர் 1ம் நாள் 2000வது ஆண்டில் திருச்சபை இவர்களை புனிதர்களாக உயர்த்தி பிப்ரவரி 25ம் நாள் விழாவாகக் கொண்டாடுகிறது. சிறப்பான விதத்தில் சலேசியர்கள் இவர்களது நினைவு நாளை நவம்பர் 13ம் நாள் கொண்டாடுகின்றனர்.

ஆயர் வெர்சிலியாவும் தந்தை கரவாரியோவும் நல்லாயனின் பண்புகளை எந்தநிலையிலும் தவறாமல் தம் வாழ்நாளில் தம் மந்தையைக் காக்கும் பொருட்டு தம் உயிரையே கொடுத்தவர்கள். இவர்களின் வாழ்வால் நாம் புரிந்துகொள்ள வேண்டியவை என்னவென்றால், புனிதர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை நமது வாழ்வில் உணர்ந்து, எல்லோரையும் ஒன்றிணைத்து எல்லோருக்கும் அடிப்படையாக அமையும் சலேசிய ஆன்மீகத்தை நமக்கு வாழ்வாக்கிய புனிதர்கள் வெர்சீலியா மற்றும் கரவாரியோ முன்மாதிரியில் பல இளையோரை இறை அழைத்தலில் நிலைபெற செய்ய வேண்டிய கடமை நம்முடையது. அதுமட்டுமன்று மறைப்பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துள்ள நம் சலேசியத் துறவிகளை திடப்படுத்தி ஆசீர்வதித்து அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களைத் திறம்பட வழிநடத்தத் தேவையான அருளை இறைவன் அவர்களுக்குத் தந்தருள வேண்டுமென்று தினமும் செபிப்பதும் இவர்களுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாகும். ஆயர் வெர்சிலியா மற்றும் தந்தை கரவாரியோவின் வாழ்க்கை, மனிதனைத் தேவனாக்கும் இரண்டாம் பரிணாமம் என்றால் அது மிகையாகாது.



# திருஅவைச் செய்திகள்

*திரு. சாண்டோ*

### அன்புக் கூர்ந்தார் - சுற்றுமடல்

2024 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று இயேசுவின் திருஇருதயம் குறித்த Dilexit nos என்ற நான்காவது சுற்றுமடலில் மொத்தம் 220 எண்களில் மனித மற்றும் இறைஅன்பில் இயேசுகிறிஸ்துவின் திருஇருதயஅன்பு குறித்து எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். கிறிஸ்துவின் அன்பு அவருடைய திருஇருதயத்தில் பிரதிபலிக்கிறது, உலகம் தன் இதயத்தை இழந்துவிட்டதாகத் தெரிகிறது, இதயத்திற்குத் திரும்புவதன் முக்கியத்துவம், இயேசுவின் செயல்கள் மற்றும் அன்பின் வார்த்தைகள், வார்த்தை மனுஉருவான நற்செய்தியின் உள்ளடக்கத்திற்குத் திரும்புதல், தாகம் தீர்க்கும் அன்பால் நிரப்பப்பட்ட புனிதர்கள் மற்றும் புனிதைகள், புனித மார்கரெட் மேரி அலகோக் பெற்ற திருஇருதய காட்சிகள், நம் சகோதர சகோதரிகளிடம் நம்மை அனுப்பும் கிறிஸ்துவின் திருஇதயத்தின் மீதான பக்தி, உலகை அன்பு செய்ய வைக்கும் பணி என்னும் பக்கத்தலைப்புகளுடன் இடம்பெற்றுள்ள இச்சுற்றுமடலானது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செபத்துடன் நிறைவுபெறுகின்றது.

### மன்னிக்கப்பட்ட மீட்கப்பட்ட மக்களை முதன்மையாக வரவேற்கும் திருஅவை

எல்லாரையும் மன்னியுங்கள், எப்போதும் மன்னியுங்கள், நாம் மன்னிப்பதற்காகவே இருக்கின்றோம் என்றும், திருஅவை மீட்கப்பட்ட மன்னிக்கப்பட்ட மக்களையும், கடவுளின் ஒளி, மென்மை மற்றும் ஆற்றலில் நம்பிக்கையும் அன்பும் கொண்ட மக்களை முதன்மையாக வரவேற்கின்றது

என்றும் கூறினார் தூய பேதுரு பெருங்கோவிலில் உள்ள பாவமன்னிப்பு திருவருளடையாளம் வழங்கும் பொறுப்பு Frati Minori சபையினருக்கு வழங்கப்பட்டதன் 250 ஆவது ஆண்டு விழா வாழ்த்துக்களையும் கூறி மகிழ்ந்தார். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவிலுக்கு எண்ணற்ற மக்கள் ஒவ்வொரு நாளும் வருகின்றனர் என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், தங்களது பாவத்திற்காக மனம் வருந்தும் மக்களுக்கு பணியாற்றுகின்ற மனசாட்சி திருப்பீடத்துறையின் பணி மிக முக்கியமானது என்றும் எடுத்துரைத்தார்.

## "இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்" என அடிக்கடி கூறுங்கள்

இன்றைய உலகின் மக்களுக்கு நற்செய்தியின் ஒளியின் தேவை உள்ளது என்ற திருத்தந்தை, மறைப்பணி நடவடிக்கைகளின் பழைய பாதைகளில் நடந்துவரும் அதேவேளையில், புதிய பாதைகளைக் கண்டுகொண்டு, மக்களிடையேயான நட்புணர்வின் புதிய வழிகளை கைக்கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார். நம் விசுவாசத்தின் கனிகளையும் மகிழ்வையும் கொணரும் நற்செய்தியை தெருக்களிலும் உலகின் மூலை முடுக்குகளிலும் பிறரோடு பகிரவேண்டிய நம் கடமைகளையும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். புனித சிலுவையின் பவுலின் தனிவரத்தைக் கொண்டுள்ள திருப்பாடுகள் சபை, தன் வாழ்வு நடவடிக்கைகள் வழியாக நற்செய்தியை அறிவித்து வருகின்றது என்ற பாராட்டையும் அச்சபையின் அங்கத்தினர்களிடம் தெரிவித்தார் திருத்தந்தை.

## இயக்கத்தில் இருக்கும் நீர் போல இளைஞர்கள் வாழவேண்டும்

சோர்வடைந்து முன்னோக்கிச் செல்லாமல் தேங்கி விடும் இளைஞன் தீயவனாகின்றான் - திருத்தந்தை பிரான்சிஸ். முன்னோக்கிச் செல்வது என்பது மிக முக்கியமானது என்று அச்செய்தியில் வலியுறுத்தியுள்ள திருத்தந்தை அவர்கள் முன்னோக்கிச்செல்லும் இளைஞன் நன்றாக வாழ்கின்றான் என்றும், முன்னோக்கிச் செல்லாமல் நின்றுவிடும் இளைஞன் தேங்கி நிற்கும் தண்ணீர் போன்றவன் என்றும் எடுத்துரைத்துள்ளார். ஓடுகின்ற நீர் விளைச்சலையும் வளமையையும் தருகின்றது, அதுவே தேங்கியிருக்கும் நீரானது கழிவுகளையும் இறந்த விலங்கினங்களையும் கொண்டு வருகின்றது என்று எடுத்துரைத்துள்ள திருத்தந்தை அவர்கள், சோர்வடைந்து முன்னோக்கிச் செல்லாமல் தேங்கி விடும் இளைஞன் தீயவனாகின்றான் என்றும் கூறியுள்ளார். எப்போதும் முன்னோக்கிச் செல்லுங்கள் என்று வலியுறுத்தியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், துணிவுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ இளைஞர்களுக்கு ஊக்கமூட்டியதுடன் தனக்காக செபிக்கும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஆற்றல் மிக்க செயல்களைச் செய்ய துணிவுடன் இருங்கள்

இயேசு சபை நீண்ட காலமாக மனிதகுலத்தின் தேவைகள், கடவுளின் மீட்பு மற்றும் அன்பைப் பூர்த்தி செய்யும் இடத்தில் இருந்து வருகிறது. சீடர்கள் நாள்

முழுவதும் இயேசுவோடு இருந்தது போல தனிசெபம், திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் வழியாக அவரோடு எப்போதும் நெருக்கமாக இருங்கள் என்றும், அவரது உடனிருப்பை அன்றாட வாழ்வில் உணர்வதன் வழியாக, ஆற்றல் மிக்க செயல்களைச் செய்ய துணிவுடன் இருங்கள் என்றும் இயேசு சபை உயர்தலைவர்களுக்கு எடுத்துரைத்தார் திருத்தந்தை லியோ.

உண்மையை எடுத்துரைத்தல், ஒப்புரவு அளித்தல் குணமளித்தல் நீதிக்கான செயல்களில் ஈடுபடுதல், சிறையிலிருப்பவர்களுக்கு விடுதலை அளித்தல் போன்ற செயல்களில் துணிவுடன் ஈடுபட வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், கிறிஸ்துவோடு நாம் உடன் நடந்தால் எந்த எல்லையும் நமது எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருக்காது என்றும் வலியுறுத்தினார்.

இயேசு சபை நீண்ட காலமாக மனிதகுலத்தின் தேவைகள் கடவுளின் மீட்பு மற்றும் அன்பைப் பூர்த்தி செய்யும் இடத்தில் இருந்து வருகிறது. ஆன்மீக வழிகாட்டுதல், அறிவுசார் உருவாக்கம், ஏழைகளுக்கு பணியாற்றுதல், கலாச்சார எல்லைகளில் கிறிஸ்தவத்திற்கு சான்றளித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது என்றும், இயேசு சபையாரின் பணிகள் மற்றும் விருப்பங்களை எடுத்துரைத்து அவர்களை வாழ்த்திய திருத்தந்தை அவர்கள், இப்பணிகள் மனித மற்றும் இறைத்தன்மை கொண்ட கூக்குரலுக்கு பதிலளிக்கிறது என்றும், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, எளிமை மற்றும் கடவுளின் கொடைக்கான நன்றியுணர்வின் எடுத்துக்காட்டுகளாக வாழும் சமூகங்கள் இருக்கட்டும் என்றும் கூறினார்.

## தமிழ்நாடு கத்தோலிக்க இளைஞர் இயக்கத்தின் "மாற்றம் நோக்கி 100 கருத்தாளர்கள்"

Sisters of Charity (SCCG) சபையின் தென்கிழக்கு இந்திய மாகாணத்தின் தலைமையகமான மரியகத்தில் நடைபெற்ற இந்த பயிற்சியில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 36 இளைஞர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு ஆயர் பேரவையின் இளைஞர் பணிக்குழுவின் ஒரு அங்கமாக தமிழ்நாடு கத்தோலிக்க இளைஞர் இயக்கம் விளங்குகிறது.

இந்த இயக்கத்தின் கருத்தாளர் குழு இளைஞர்களை அரசியல்படுத்தி சிறந்த கருத்தாளர்களாக உருவாக்கும் நோக்கத்துடன் "மாற்றம் நோக்கி 100 கருத்தாளர்கள்" என்ற தலைப்பில் பயிற்சிகள் வழங்கி வருகின்றனர்.

ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் இந்த பயிற்சியின் இரண்டாவது நேரடி அமர்வு இணைய வழியில் நடைபெறும். இந்த பயிற்சிக்கான அரங்கம், தங்குமிடம், உணவு ஆகியவற்றை தாராள மனதோடு வழங்கிய Sisters of Charity (SCCG) சபையின் தென்கிழக்கு இந்திய மாகாணத்தின் தலைமைச் சகோதரியான சகோ. லொரேட்டா செசிலாயா ரொசாரியோ அவர்களுக்கும், உடனிருந்த அனைத்து சகோதரிகளுக்கும், MSFS சபையின் மறைமாநில தலைமையகத்திற்கும், பணி. பேட்ரிக் அவர்களுக்கும் பணி. எடிசன் அவர்களுடன் இணைந்து பங்கேற்ற அனைத்து இளம் கருத்தாளர்களும் நன்றி தெரிவித்தனர்.

* * *

# சுடர் வாசகர் போட்டி 127 சரியான விடைகள்

1. அருளாளர் தொன் மைக்கேல் ரூவா
2. தீவிரவாதியான புனித சிமியோன்
3. புனித அலோசியஸ் குவனெல்லா
4. அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார்
5. அருளாளர் அலெக்சாண்ட்ரீனா மரியா தக்கோஸ்தா
6. திருத்தந்தை 13ம் கிரகோரியார்
7. புனித பிரான்சிஸ் அசிசி
8. ஒன்பதாவது குழந்தை
9. திருத்தூதர் புனித யூதா
10. திருத்தந்தை ஆறாம் சின்னப்பர்
11. "போயேத்தியாவில் அல்லது பித்தினியாவில்" தனது 74வது வயதில்
12. புனித பேதுரு
13. திருத்தந்தை ஆதிரியான்
14. புனித பிரான்சிஸ் அசிசி
15. 24ம் வயதில்



## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

1. திரு. ஞானசேகரன், காட்பாடி
2. அருட்சகோதரி ப்ளோரன்ட் மேரி, சேலம்
3. திரு. அந்தோணிசாமி, பெங்களூரு.

# சுடர்
## வாசகர் போட்டி 128

1. திருத்தந்தை மனசாட்சி திருப்பீடத்துறையின் பணி மிக முக்கியமானது என்று யாரைப் பார்த்துக் கூறினார்?
2. புனித அலோசியஸ் வெர்சீலியா - கலிஸ்துஸ் கரவாரியோ இவர்களின் புனிதப்பட்ட நாள், ஆண்டு எது?
3. "இறந்த உம் மக்கள் உயிர் பெறுவர் அவர்களின் உயிரற்ற உடல்கள் மீண்டும் எழும்" விவிலியத்தில் எங்குள்ளது?
4. கிரேக்க மக்கள் அன்னை மரியாள் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்ட நாளை எந்த பெயரில் கொண்டாடுகிறார்கள்?
5. அருளாளர் மதலேனா மொரானோ எந்த ஆண்டு எங்கு இறந்தார்?
6. சலேசிய சபையின் முதல் மறைசாட்சிகள் யார்?
7. புனித சார்லஸ் பொரோமெயோவை ஆயர்களுக்கு ஆசிரியர் என அழைத்தவர் யார்?
8. "எனக்கு வாழ்வு என்பது கிறிஸ்துவே" கூறியது யார்?
9. "ஒரு சிறந்த விலங்கியல் மருத்துவராக வேண்டும் என்பதே என் எண்ணம்" இது யாருடைய குறிக்கோள்?
10. ஈசாக்கை அடக்கம் செய்த இடம் எது?
11. பாடற்குழுவின் பாதுகாவலி யார்?
12. புனித அனாக்ளீற்றரசு புனித பவுலின் நினைவாக எழுப்பிய பேராலயம் எந்த சாலையில் அமைந்துள்ளது?
13. "பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம்" திருவிவிலியத்தில் எங்குள்ளது?
14. புனித அலோசியஸ் வெர்சிலியா எந்த ஆண்டு முதல் முறையாக சீனா புறப்பட்டார்?
15. தூய ஆவியின் வழியாக கடவுளின் அன்பு நம்மீது எங்குப் பொழியப்பட்டுள்ளது.

## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

பகுதி-1

## வழிபாட்டு வழிகாட்டி

புனித பிரான்சிஸ் சவேரியார் - மறைப்பணியாளர், இந்தியாவின் பாதுகாவலர் பெருவிழா
புனித யோவான் தமசேன்
அருளாளர் பிலிப்பு ரினால்டி
புனித நிக்கோலாஸ் - ஆயர்
திருவருகைக்காலம் 2ஆம் வாரம் - ஞாயிறு
தூய கன்னி மரியாவின் அமலோற்பவம் பெருவிழா
லொரேட்டோ அன்னை
புனித முதலாம் தமசுஸ் - திருத்தந்தை
புனித குவாதெலுப் அன்னை
புனித லூசியா - கன்னியர், மறைச்சாட்சி
திருவருகைக்காலம் 3ஆம் வாரம் - ஞாயிறு
திருவருகைக்காலம் 4ஆம் வாரம் - ஞாயிறு
கான்டி நகர் புனித யோவான் - மறைப்பணியாளர்
கிறிஸ்து பிறப்பு திருவிழிப்புத் - திருப்பலி
கிறிஸ்து பிறப்பு பெருவிழா - திருப்பலி
புனித ஸ்தேவான் - முதல் மறைச்சாட்சி
புனித யோவான் - திருத்தூதர், நற்செய்தியாளர்
இயேசு, மரியா, யோசேப்பின் திருக்குடும்பம்
புனித தாமஸ் பெக்கட் - ஆயர் மறைச்சாட்சி
புனித முதலாம் சில்வெஸ்தர் - திருத்தந்தை

பகுதி-2

## நம்பிக்கையில் வளர...

புனித குவாதலூப் அன்னையின் வாழ்க்கை வரலாறு
கிறிஸ்து பிறப்பு பெருவிழா - நமக்குத் தரும் செய்தி என்ன?
திருக்குடும்பம் - புனிதக் குடும்பம்
திருஅவையின் செய்திகள்

## நவம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 01 | ச | புனிதர் அனைவர் பெருவிழா | I. யோவா. 7: 2-4, 9-14<br>II. 1யோவா. 3: 1-3 | மத். 5: 1-12 |
| 02 | ஞா | இறந்த ஆன்மாக்களின் திருவிழா | I. சாஞா. 3: 1-9<br>II. உரோ. 5: 5-11 | மத்.25:31-46 |
| 03 | தி | புனித மார்ட்டின் தெ போரெஸ் துறவி | உரோ. 11: 29-36 | லூக் 14: 12-14 |
| 04 | செ | | உரோ.12: 5-16 | லூக்.14: 15-24 |
| 05 | பு | இறந்த சலேசிய உடனுழைப்பாளர்கள், உபகாரிகளுக்காக | உரோ. 13: 8-10 | லூக். 14: 25-33 |
| 06 | வி | | உரோ. 14: 7-12 | லூக். 15: 1-10 |
| 07 | வெ | | உரோ 15: 14-21 | லூக். 16: 1-8 |
| 08 | ச | | உரோ 16: 3-9, 16, 22-27 | லூக். 16: 9-15 |
| 09 | ஞா | இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு விழா | I.எசே. 47: 1-2, 8-9, 12<br>II. 1கொரி. 3: 9-11, 16-17 | யோவா. 2:13-22 |
| 10 | தி | | சா.ஞா. 1: 1-7 | லூக். 17: 1-6 |
| 11 | செ | | சா.ஞா. 2: 23- 3: 9 | லூக். 17: 7-10 |
| 12 | பு | | சா.ஞா. 6: 1-11 | லூக் 17: 11-19 |
| 13 | வி | அருளாளர் ஆர்த்தெமெதே சாத்தி | சா.ஞா. 7: 22- 8: 1 | லூக். 17: 20-25 |
| 14 | வெ | | சா.ஞா. 13: 1-9 | லூக். 17: 26-37 |
| 15 | ச | அருளாளர் மதலேனா மொரானோ | சா.ஞா. 18: 14-16 19: 6-9 | லூக். 18: 1-8 |
| 16 | ஞா | பொதுக்காலம் 33ஆம் வாரம் - ஞாயிறு | I. மலா. 4: 1-2<br>II. 2தெச. 3: 7-12 | லூக் 21: 5-19 |
| 17 | தி | | 1மக். 1: 10-15, 41-43, 54-57, 62-64 | லூக். 18: 35-43 |
| 18 | செ | திருத்தூ. பேதுரு, பவுல் பேராலயங்களின் நேர்ந்தளிப்பு | தி.ப. 28: 11-16, 30-31 | மத். 14: 22-23 |
| 19 | பு | | 2மக். 7: 1, 20-31 | லூக். 19: 11-28 |
| 20 | வி | | 1மக். 2: 15-29 | லூக் 19: 11-28 |
| 21 | வெ | | 1மக். 4: 36-37, 52-59 | லூக். 19: 45-48 |
| 22 | ச | | 1மக். 6: 1-13 | லூக். 20: 27-40 |
| 23 | ஞா | இயேசு கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழா | I. சாமு. 5: 1-3<br>II. 1கொலோ. 1: 12-20 | லூக்.23:35-43 |
| 24 | தி | | தானி. 1: 1-6, 8-20 | லூக். 21: 1-4 |
| 25 | செ | சலேசியர்களின் இறந்த பெற்றோருக்காக | தானி. 2: 31-45 | லூக். 21: 5-11 |
| 26 | பு | | தானி. 5: 1-6, 13-14, 16-17, 23-28 | லூக். 21: 12-19 |
| 27 | வி | | தானி. 6: 11-27 | லூக். 21: 20-28 |
| 28 | வெ | | தானி. 7: 2-14 | லூக். 21: 29-33 |
| 29 | ச | | தானி. 7: 15-27 | லூக். 21: 34-36 |
| 30 | ஞா | திருவருகைக்காலம் முதல் வாரம் - ஞாயிறு | I. எசா. 2: 1-5<br>II. உரோ. 13: 11-14 | மத். 24: 37-44 |

# தீபகம் – தொன் போஸ்கோ

## நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

வழங்கும்



# இல்லங்களில் திருவிவிலியக் கல்வி

## பருவம்-1

### திருத்தூதர் பணிகள் நூல்

- தபால் மூலம் பதினைந்து விரிவான பாடங்கள்
- உங்கள் புரிதலை உறுதிப்படுத்திக் கொள்ள கேள்வித் தொகுப்புகள்
- பதில் எழுதி அனுப்புவோருக்கு அழகிய சான்றிதழ்
- சான்றிதழ் கல்விக்கான கட்டணம் ரூ.500/-
- மாதம் ரூ.100/- என தவணை முறையிலும் செலுத்தலாம்
- கட்டணம் அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு விபரம்

SOUTH INDIAN Bank
EXPERIENCE NEXT-GEN BANKING

SISS A/C DEEPAGAM

கட்டணம் செலுத்திய விபரம், பெயர், முகவரி,
அலைபேசி எண்களை தெரிவிக்க வேண்டிய
அலைபேசி எண் : 9385201453

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள

**தீபகம் +91 9385201453**

தொடர்ந்து கற்கவிருக்கும் திருவிவிலிய நூல்கள் :
(தூய மத்தேயு, தூய யோவான் எழுதிய நற்செய்திகள், பவுலடியாரின் திருமடல்கள், திருவெளிப்பாடு)

## திருவிவிலியம்

*ஆழ்ந்து அறிவோம்! முனைந்து வாழ்வாக்குவோம்!! தெளிந்து அறிவிப்போம்!!!*

**தீபகம்** தொன் போஸ்கோ
நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

வழங்கும்

சென்னை சலேசிய மாநில பள்ளிகளுக்கான

# மாபெரும் திருவிவிலிய வினா–விடை போட்டி

## நவம்பர் 2025

| | | |
|---|---|---|
| மண்டலம் 1 | புதுச்சேரியில் | 15-11-2025 |
| மண்டலம் 2 | வேலூரில் | 18-11-2025 |
| மண்டலம் 3 | சென்னை (தெற்கு) | 22-11-2025 |
| மண்டலம் 4 | சென்னை (வடக்கு) | 25-11-2025 |

*முதல் 3 இடங்களைப் பிடிக்கும் பள்ளிகளுக்கு கேடயமும்*
*இறுதி சுற்றுக்கு தகுதி பெறும் பள்ளிக்கு பரிசு கோப்பையும் வழங்கப்படும்*

*இறுதி சுற்றுக்கு தகுதி பெற்ற ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும்*
*ஒரு பள்ளிக்கு தீபக மறைக்கல்வி தின விழா கொண்டாட்டத்தில்*
*(தேதி விரைவில் அறிவிக்கப்படும்) இறுதி சுற்று நடைபெறும்.*

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
+91 9385201453 Deepagam Don Bosco

*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி** வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
*தயாரிப்பில் மேற்பார்வை* : **சாண்டோ, ஈசாக், மரிய சந்தோஷ், மரிய ஜேம்ஸ்**